# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க,
## பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம்

---

[*2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024, ஓகத்து மாதம் 09 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 126.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க,**
**பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டம்**

[*2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.- ஒ. 48/2023*

***சிறந்த பேரினப்பொருளாதார முகாமைத்துவத்துக்காக நிதிக் கொள்கையை மேம்படுத்தும் நோக்குடன் பகிரங்க நிதிசார் முகாமைத்துவக் கட்டமைப்பில் பகிரங்க நிதிகளின் பொறுப்புக்கூறுதல், மேற்பார்வை செய்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்பனவற்றை வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும்; நிதிசார் முகாமைத்துவத்துடன் தொடர்பு பட்ட நிறுவனஞ்சார் பொறுப்புக்களை தெளிவு படுத்துவதற்கும்; வரவுசெலவுத்திட்ட முகாமைத்து வத்தினை வலுப்படுத்துவதற்கும், நிதிக் கொள்கை மற்றும் நிறைவேற்றத்தின் பொதுமக்கள் நுனித் தாராய்வினை வசதிப்படுத்துவதற்கும்; 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் 8 ஆம் மற்றும் 14 ஆம் பிரிவுகளை நீக்குவதற்கும்; 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தினை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்*

***1.*** *(1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம்.*

*(2) மூன்றாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த, இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளும், சட்டமூலமானது எத்தேதியன்று பாராளுமன்றச் சட்டமாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

*(3) நிதி அமைச்சர் இவ்வுட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்*

படுத்துவதற்காக பின்வருமாறு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அத்தகைய தேதி அல்லது தேதிகளை நியமித்தல் வேண்டும்:-

அதாவது -

(அ) பிரிவு 11 இன் (5) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தி, பிரிவு 17 இன் (1) ஆம் உட்பிரிவு, பிரிவு 18 இன் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி, பிரிவு 36 மற்றும் பிரிவு 47 இன் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தி என்பனவற்றின் ஏற்பாடுகள் எத்தேதி அல்லது எத்தேதிகளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டுமோ அத்தேதி அல்லது அத்தேதிகள் :

ஆயின், பிரிவு 11 இன் (5) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் 2025, யூன் முப்பதாம் நாளுக்குப் பிந்தாத தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பிரிவு 34 இன் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எத்தேதியிலிருந்து 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட உருவகங்கள் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டுமோ அத்தேதி.

சட்டத்தின் குறிக்கோள்கள்

**2.** இச்சட்டத்தின் குறிக்கோள்களாவன பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

(அ) அரசிறைகள், செலவினங்கள், அர்ப்பணிப்புகள், நிதியளிப்பு ஒழுங்கேற்பாடுகள், ஒப்புரவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக பகிரங்க நிதிபற்றிய முகாமைத்துவத்தில் வெளிப்படையான தன்மை, பொறுப்புக்கூறல், ஒழுக்கம், பயனுறுதித் தன்மை, வினைத்திறன் மற்றும் பொருளாதாரம் என்பவற்றுக்கான நியமங்கள், தேவைப்பாடுகள், விதிகள் மற்றும் நடவடிக்கைமுறைகளை எடுத்துக் கூறுதல்;

(ஆ) கண்காணித்தல், மதிப்பீடு செய்தல், உள்ளகக் கட்டுப்பாடுகள், கணக்கீடுசெய்தல் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றின் செயல்முறைகளுடன் சேர்த்து நிதி பொறுப்பு குறிக்கோள்கள் மற்றும் விதிகளை நடைமுறைப்படுத்துதல், வருடாந்த வரவு செலவுத் திட்டத்தினை திட்டமிடுதல், வகுத்தமைத்தல், ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் உள்ளடங்கலாக பகிரங்க நிதியை முகாமைத்துவம் செய்தலில் பின்பற்றப்படவேண்டிய தேவைப்பாடுகளையும், நடவடிக்கைமுறைகளையும் குறித்துரைத்தல்; அத்துடன்

(இ) நிறைவேற்றம் மற்றும் பொறுப்புக்கூறல் தேவைப்பாடுகளைக் குறித்துரைத்தல்.

## பாகம் I

### சட்டத்தின் ஏற்புடைமை

*இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை*

**3.** (1) அரசியலமைப்பின் 148, 149, 150, 151 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, இச்சட்டத்திலிருந்து குறிப்பாக விலக்கப்பட்டிருந்தாலொழிய, இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி மற்றும் பணிப்புரைகள் என்பன, பகிரங்க நிதிபற்றிய முகாமைத்துவத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் கீழே குறித்துரைக்கப்பட்ட உருவகங்களுக்கும் ஆட்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்:-

(அ) (இதனகத்துப்பின்னர் "பகிரங்க உருவகங்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உருவகங்கள் பின்வருமாறு:-

(i) வரவுசெலவுத்திட்ட உருவகங்கள்;

(ii) பகிரங்க நிதி ஒதுக்கப்பட்ட நியதிச் சட்ட நிதியங்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்புகள்;

(iii) *அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள்;*

(iv) *இயைபான எழுத்திலான சட்டங்களின் நியதிகளின்படி மாகாணசபைகள் மற்றும் உள்ளூரதிகாரசபைகள் என்பவற்றின் கீழ் பணிபுரிகின்ற மாகாணசபைகள், மாகாண அமைச்சுக்கள், மாகாணத் திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்;*

*(ஆ)* இச்சட்டத்தின் பாகம் VI இல் குறிப்பீடுசெய்யப்பட்ட *பிரதான கணக்கீட்டு அலுவலர், கணக்கீட்டு அலுவலர் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரி உட்பட* இச்சட்டத்தின்கீழ் *அல்லது அதன்கீழ்* ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் தத்துவத்தை *அல்லது கடமையை அளிக்கப்பட்ட, கைளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்டுள்ளவரான அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்;*

*(3)* இச்சட்டம் ஏற்புடைமையாகின்றமை தொடர்பில் *(2)* ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒவ்வொரு பகிரங்க உருவகமும் ஆட்களும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏதேனும் அத்தகைய பகிரங்க உருவகத்தினால் ஒதுக்கிடப்பட்ட அல்லது அறவிடப்பட்ட பகிரங்க நிதிகளை முகாமைசெய்வதில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

## பாகம் II

## நிதியமைச்சரின் மற்றும் வேறு அதிகாரிகளின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

*இச்சட்டத்தின் கீழ் நிதியமைச்சரின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்*

**4.** *(1)* (இச்சட்டத்தில் “நிதி அமைச்சர்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அரசியலமைப்பின் உறுப்புரை 44 அல்லது 45 இன்கீழ் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப் பட்டுள்ளவரான அமைச்சர் அரசியலமைப்பின் உறுப்புரை 150 இன்கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு மேலதிகமாக பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாதல் வேண்டும்–

(அ) நிதி இடர்களுக்கான மூலங்களை அடையாளங்காணல் மற்றும் அவை தொடர்பிலான தகவலை வெளியிடுதல் உள்ளடங்கலாக நிதி நிலைபெறுதலை மற்றும் நிதி இடர்களின் பயனுறு முகாமைத்துவத்தினை எய்துவதற்குமான கொள்கைகளை விருத்திசெய்தல்;

(ஆ) இச்சட்டத்தின் பாகம் III இன்கீழ் நிதி பொறுப்புடைமை தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்துதல்;

(இ) அரசிறைகளைச் சேகரித்தல் பற்றிய ஒட்டுமொத்த மேற்பார்வை, செலவினம், பகிரங்க தனிசு மற்றும் அரசாங்கத்தினுடைய பணம் மற்றும் திரவநிலைத் தன்மை என்பவற்றை முகாமைசெய்தல் என்பவற்றுடன் சேர்த்து வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தினை தயாரித்தலை முகாமைசெய்தல் மற்றும் அதன் நடைமுறைப்படுத்தலைக் கண்காணித்தல்;

(ஈ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்பிலான நிதிசார் மேற்பார்வையின் அளவுவரையுடன் சேர்த்து அரசாங்கத்தின் எல்லா நிதிசார் தொழிற்பாடுகளின் பொதுவான மேற்பார்வை; அத்துடன்

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.

(2) நிதி அமைச்சர்–

(அ) இச்சட்டத்தினால் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் நிதி அமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்ட வேறு எவையேனும் தத்துவங்களை மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பவற்றின் பயனுள்ள பிரயோகத்துக்காக பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

(3) நிதி அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அக்கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான நிபந்தனைகள், ஒதுக்குகள் மற்றும் மட்டுப்பாடுகள் என்பவற்றுக் கமைய, 28 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, 32 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு, 39 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு, 56 ஆம் பிரிவு மற்றும் 67 ஆம் பிரிவு என்பவற்றின்கீழ் தவிர, இச்சட்டத்தினால் நிதி அமைச்சர்மீது அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை திறைசேரி செயலாளருக்கு கையளிக்கலாம்.

*திறைசேரி செயலாளரின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்*

**5.** (1) அரசியலமைப்பின் உறுப்புரை 52 இன் (1) ஆம் பந்தியின் நியதிகளின்படி சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நிதி அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் (இச்சட்டத்தில் "திறைசேரிக்கான செயலாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பொதுத் திறைசேரியின் தலைவராகவிருத்தல் வேண்டும்.

(2) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் குறித்தளிக் கப்பட்ட தத்துவங்கள், கடமைகள், பணிகள் மற்றும் பொறுப்புகளுக்கு மேலதிகமாக, திறைசேரிக்கான செயலாளர் இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காகப் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும்–

(அ) இச்சட்டத்தின்கீழ் தனது பணிகளைகளை நிறைவேற்று வதற்காக நிதியமைச்சருக்கு உதவுதல்;

(ஆ) வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தை தயாரித்து நிறைவேற்றுவதற்கு நிதி அமைச்சருக்கு உதவி செய்தல்;

(இ) திறைசேரி பணவோட்டத்தை முகாமைத்துவம் செய்தல் மற்றும் திறைசேரி ஒற்றைக் கணக்கின்கீழ் பேணப்படுகின்ற உத்தியோகபூர்வ வங்கி கணக்கு களின் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்தல்;

(ஈ) அரசாங்கத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை கணக்காய்வாளர்

தலைமையதிபதிக்கு சமர்ப்பித்தல் மற்றும் பொதுமக்களுக்கு சம்பந்தப்பட்ட தகவல்களைப் பரப்புதல் போன்ற நியதிச் சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதி செய்தல்;

(உ) பகிரங்க முதலீட்டுக் கருத்திட்டங்கள் மற்றும் பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டங்கள் என்பவற்றின் நடைமுறைப்படுத்துதலைக் கண்காணித்தல் மற்றும் விளைவுகளை மதிப்பீடு செய்தல்;

(ஊ) அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கமைய, அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பயனுள்ள முகாமைத்துவம் மற்றும் ஒட்டுமொத்த மேற்பார்வை ஆகியவற்றுக்கான கொள்கைகள் மற்றும் செயல் நுணுக்கங்களை வகுத்தமைத்தல்;

(எ) தேசிய ஊதியக் கொள்கைக்கிணங்க பகிரங்கத் துறை ஊழியர் கோப்பு மற்றும் ஊதியம் என்பவற்றை முகாமைசெய்வதற்கு நிதி அமைச்சருக்கு உதவுதல்;

(ஏ) நிதி முகாமைத்துவம், சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் பகிரங்க உருவகங்களினது உள்ளக கணக்காய்வு முகாமைத்துவம் என்பவற்றுக்கான பணிப்புரைகளை வகுத்தமைத்தல், விருத்தி செய்தல், மீளாய்வு செய்தல், மற்றும் இற்றைப்படுத்துதல்;

(ஐ) அமைச்சரவையின் அங்கீகாரத்தின்மேல் அரசாங்கத்தின் சார்பாக வெளிநாட்டு அரசாங்கங்கள், சர்வதேச ஒழுங்கமைப்புகள் அல்லது ஏனைய நன்கொடை முகவராண்மைகள் ஆகியவற்றுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல்; அத்துடன்

(ஒ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத வகையில் இச்சட்டம் மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டம் என்பவற்றின்கீழ் திறைசேரியின் செயலாளருக்கு குறித்தளிக்கப்பட்ட வேறு எவையேனும் தத்துவங்கள் மற்றும் பணிகளை நிறை வேற்றுதல்.

*திறைசேரிச் செயலாளருக்கான தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைக் கையளித்தல்*

**6.** (1) திறைசேரிச் செயலாளர் எழுத்துமூலம் மற்றும் அதன் கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, திறைசேரிக்கான பிரதிச் செயலாளருக்கு அல்லது திறைசேரியின் பணிப்பாளர் தலைமையதிபதி என்னும் தரத்துக்கு குறையாத எவரேனும் அலுவலருக்கு இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் திறைசேரிக்கான செயலாளருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றைக் கையளிக்கலாம்.

(2) திறைசேரிக்கான செயலாளர் தரமாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகிக்கலாம், நிறைவேற்றலாம் அல்லது புரியலாமென்பதுடன் எந்நேரத்திலும் அத்தகைய ஏதேனும் கையளிப்பை இல்லாதொழிக்கலாம்.

(3) திறைசேரிக்கான செயலாளர் பதவி வகிக்காதொழித் துள்ளமை எவ்வாறிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

*பிரதான கணக்கீட்டு அலுவலரின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்*

**7.** பிரதான கணக்கீட்டு அலுவலர், கணக்கீட்டு அலுவலர் மற்றும் அரசிறை கணக்கீட்டு அலுவலர் என்போரின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பன விதித்துரைக் கப்படுதல் வேண்டும்.

*அரசிறை முகாமைத்துவக் குழு*

**8.** (1) நிதி அமைச்சர் பின்வருவனவற்றுக்கு பொறுப்பாகவுள்ள (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட அரசிறை முகாமைத்துவக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும்:-

(அ) 11 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நிதி செயல் நுணுக்க கூற்றுடன் ஒத்திசைகின்ற அரசிறை செயல் நுணுக்கங்களை விருத்தி செய்தல் மற்றும் வகுத் தமைத்தல்; அத்துடன்

(ஆ) அரசிறையை பிறப்பிக்கின்ற பகிரங்க உருவகங்களுக்கு செயல்நுணுக்க ஆலோசனையை வழங்குதல்.

(2) அரசிறை முகாமைத்துவக் குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) பின்வருவோர் பெயர்குறிப்பிடப்பட்ட பதவிவழி உறுப்பினர்களாவர்-

(i) திறைசேரிக்கான செயலாளர் தவிசாளராக விருத்தல்;

(ii) நிதிக் கொள்கை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திறைசேரிக்கான பிரதிச் செயலாளர்;

(iii) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி;

(iv) சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி;

(v) மதுவரி ஆணையாளர் பணிப்பாளர் தலைமையதிபதி;

(vi) திறைசேரித் தொழிற்பாடுகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(vii) நிதிக் கொள்கை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி; அத்துடன்

(ஆ) அரசிறை முகாமைத்துவம் என்னும் துறையில் தேர்ச்சி பெற்றவர்களான ஆட்களுக்கிடையேயிருந்து நிதி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஏனைய இரண்டு உறுப்பினர்கள்.

(3) அரசிறை முகாமைத்துவக் குழுவுக்கான செயலாளர் திறைசேரிக்கான செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நிதிக் கொள்கை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள திணைக்களத்தின் அலுவலராகவிருத்தல் வேண்டும்.

(4) அரசிறை முகாமைத்துவக் குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் நிதி அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதமொன்றின்மூலம் அத்தகைய குழுவிலிருந்து இராஜினாமா செய்யலாம்.

(5) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அரசிறை முகாமைத்துவக் குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு அத்தகைய குழுவில் சேவையாற்றுதல் வேண்டுமென்பதுடன் மீள்நியமனத்துக்காக தகவுடையராதலும் வேண்டும்.

(6) அரசிறை முகாமைத்துவக் குழுவின் பணிகள் மற்றும் அரசிறைகளை வகுதிப்படுத்தல், சேகரித்தல் மற்றும் வைப்பிலிடுதல், அரசிறையிலிருந்தான மீளளிப்பு மற்றும் தேவைப்பாடுகளை அறிக்கையிடல் என்பன பற்றிய முறையினை விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

(7) அரசிறை முகாமைத்துவக் குழுவின் பணிகள் அரசிறை முகாமைத்துவக் குழுவுக்கும் பிரிவு 3 இன் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பகிரங்க உருவகத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகளுக்குமிடையில் முரண்பாடெதனையும் உருவாக்காத அத்தகைய முறையில் ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்திலான சட்டத்துக்கமைய நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### நிதி பொறுப்புடைமை

*அரசாங்கத்தின் நிதி பொறுப்புடைமை*

**9.** அரசாங்கம் பேரினப் பொருளாதார நிலைபேறு தன்மை, நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் தலைமுறை இடையேயான ஒப்புரவு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப பொறுப்புக்கூறக்கூடிய, வினைத்திறன்மிக்க, நியாயமான, வெளிப்படையான தன்மை மற்றும் நிலைபெறுதகு முறையில் தனது நிதிக் கொள்கையை முகாமைசெய்தல் வேண்டும்.

*பொறுப்புள்ள நிதி முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள குறிக்கோள்கள்*

**10.** அரசாங்கத்தினால் பின்பற்றப்படுவதற்குத் தேவையான நிதி முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள குறிக்கோள்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும். —

(அ) பகிரங்க தனிசு குறைக்கப்பட்டு, நிலைபேறான மட்டத்திற்கு பேணப்படுகின்றது என்பதை உறுதி செய்தல்;

(ஆ) எதிர்கால அதிர்ச்சிகளுக்கு எதிராக பாதுகாக்கக்கூடிய நிதி பாதுகாப்பு வலயங்களை உருவாக்கிப் பேணுதல்;

(இ) நிதி இடர்களை அறிவார்ந்த முறையில் முகாமைத் துவம் செய்தல் மற்றும் தணித்தல்;

(ஈ) நிதி முகாமைத்துவத்தில் ஒழுக்கம், வெளிப்படையான தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் ஆகியவற்றை உறுதி செய்தல்;

(உ) வருடாந்த நிதி செயல்நுணுக்க கூற்றொன்றையும் சுழல்முறையில் ஐந்து ஆண்டு நடுத்தர கால நிதிக் கட்டமைப்பையும் அபிவிருத்தி செய்வதற்காகவும் வெளியிடுவதற்காகவும் தேவைப்பாடுகளை நிலை நாட்டுவதன் மூலம் நிதிகள் திட்டமிடலுக்கான கால அளவை நீடித்தல்; அத்துடன்

(ஊ) அரசாங்கத்தின் நிதி நிறைவேற்றத்தின் வினைத்திறன் மிக்க நுனித்தாராய்விற்கு வசதிப்படுத்துதல்.

*நிதி செயல்நுணுக்கக் கூற்று*

**11.** (1) அரசாங்கத்தின் நிதி செயல்நுணுக்கம் பிரிவு 10 இல் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை எய்துவதனை உறுதிப் படுத்துவதற்கு இப்பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட நிதி பொறுப்பு கட்டமைப்புடன் இணங்கியொழுகுதல் வேண்டு மென்பதுடன் நிதி செயல்நுணுக்க கூற்றில் தரப்பட்டிருத்தலும் வேண்டும்.

(2) நிதி செயல்நுணுக்க கூற்றானது ஆண்டுதோறும் நிதி அமைச்சரினால் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அது அங்கீகாரத்துக்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டதன்மேல், நிதி செயல்நுணுக்க கூற்றானது ஒவ்வோராண்டும் யூன் முப்பதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் நிதி அமைச்சரினால் அறிவிக்கப்படுதல் வேண்டும். அடுத்த ஆண்டுக்கான வருடாந்த வரவுசெலவுத் திட்டம் அத்தகைய நிதி செயல்நுணுக்க கூற்றின் அடிப்படையின்மீது தயாரிக்கப்படுதல் வேண்டும். நிதி செயல்நுணுக்க கூற்று நிதி அமைச்சரினால் செய்யப்பட்ட அறிவித்தலின் மேல் நிதியமைச்சரின் அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தின்மீது வெளியிடப்படுதலும் வேண்டும்.

(4) நிதி செயல்நுணுக்க கூற்றின் நோக்கம் பின்வருவன வற்றுக்காக இருத்தல் வேண்டும். —

(அ) வருடாந்த வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படுவதற்கு முன்னர் அரசாங்கத்தின் நிதி செயல்நுணுக்கத்தின் முறையான கூற்றினை பாராளுமன்றத்திற்கும் பொது மக்களிற்கும் வழங்குதல்;

(ஆ) எதிர்வரும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்திற்காக செயல்நுணுக்க ரீதியான வழிகாட்டுதலை வழங்குதல்;

(இ) நிதி நிறைவேற்றத்தின் புறவயத் தன்மையை மதிப்பீடு செய்யக்கூடிய அடிப்படைகளைத் தாபித்தல்;

(ஈ) அரசாங்கத்தினுடைய நிதி செயல்நுணுக்கத்துக் கெதிரான நிறைவேற்றுகை பற்றிய பாராளுமன்ற மேற்பார்வையை வலுப்படுத்தல்; அத்துடன்

(உ) நிதி வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் ஆகியவற்றை விரிவுபடுத்துதல்.

(5) நிதி செயல்நுணுக்க கூற்றானது ஆகக் குறைந்தது பின்வருவனவற்றை செய்தல் வேண்டும் —

(அ) அரசாங்கத்தினுடைய நிதி இலக்குகளை மற்றும் அத்தகைய இலக்குகளை எய்துதலை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற கொள்கைகளை குறித்துரைத்தல்;

(ஆ) பொதுத் தனிசை நிலைபெறுதகு மட்டத்துக்கு குறைப்பதற்காக உத்தேசிக்கப்பட்ட கால வரையறையை உள்ளடக்குதல்;

(இ) அரசாங்கத்தினுடைய நிதி இலக்குகள் மற்றும் கொள்கைகள் என்பன பொறுப்பான நிதி முகாமைத்துவத்தின் குறிக்கோள்களுடன் எவ்வாறு இசைந்தொழுகுகின்றது என்பதனை விளக்குதல்;

(ஈ) 12 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நடுத்தர கால நிதிக் கட்டமைப்பை உள்ளடக்குதல்;

(உ) பின்வருவன உள்ளடங்கலாக நிதி செயல்நுணுக்கத்துக்கு எதிரான நிறைவேற்றத்தின் மதிப் பீட்டினை வழங்குதல்-

(i) அத்தகைய இலக்குகளுடன் எவையேனும் இணக்கமின்மை தொடர்பான விளக்கம் உள்ளடங்கலாக, முற்போந்த நிதி ஆண்டிற்கான நிதி இலக்குகளுடன் இசைந்தொழுகுதல் பற்றிய மதிப்பீடு;

(ii) தற்போதைய நிதி ஆண்டிற்கான நிதி இலக்குகளுடன் எதிர்பார்க்கப்பட்ட இணங்கியொழுகுதல் பற்றிய மதிப்பீடொன்று;

(iii) அடுத்த நிதியாண்டு மற்றும் அடுத்துவரும் நான்கு ஆண்டுகள் என்பவற்றுக்கான நிதி இலக்குகளுடன் எதிர்பார்க்கப்பட்ட இணங்கியொழுகுதல் பற்றிய மதிப்பீடொன்று; அத்துடன்

(iv) தற்போதைய நிதியாண்டு மற்றும் அடுத்த நிதியாண்டு என்பவற்றுக்கான நிதி இலக்குகளுடன் இசைந்தொழுகாமை பற்றிய இடர்கள் பற்றிய மதிப்பீடொன்று;

(ஊ) 10 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள் களை எய்துவதற்கு எதிராக நிதி இடர்கள் பற்றிய பிரதான மூலங்களை குறித்துரைத்தலும் அத்தகைய நிதி இடர்கள் பற்றிய நிதி தாக்கத்தை மதிப்பீடு செய்தலும்; அத்துடன்

(எ) கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேல் எடுக்கப்பட்ட நிதி முடிபுகளின் பேரினப் பொருளாதார தாக்கத்தினை வெளிப்படுத்துதல்.

இடைக் கால நிதி கட்டமைப்பு

**12.** (1) நிதி அமைச்சர் அடுத்துவரும் நிதியாண்டு மற்றும் அடுத்துறும் நான்கு நிதியாண்டுகள் என்பவற்றுக்கான இடைக் கால நிதி கட்டமைப்பினை தயாரிக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும். அது 11 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நிதி செயல்நுணுக்க கூற்றினுள் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப் படுதலும் வேண்டும்.

(2) இடைக் கால நிதி கட்டமைப்பு ஆகக் குறைந்தது பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) எதிர்வு கூறப்பட்ட பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசாங்கத்தினால் வெளிப்படுத்தப்பட்ட தனிசு குறைப்பு குறிக்கோள்களுடன் இசைந்தொழுகும் ஆரம்ப மீதி இலக்கு;

(ஆ) 15 ஆம் பிரிவின்கீழ் கணக்கீடுசெய்யப்பட்ட இலங்கை ரூபாயில் அரசாங்கத்தினால் வெளிப்படுத்தப்பட்ட ஆரம்ப செலவின உச்ச வரம்பொன்று; மற்றும்

(இ) இக்கணிப்புகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பொருளியல் மற்றும் ஏனைய ஊகங்களுடன் ஒன்று சேர்த்து சுழல்முறையில் ஐந்து ஆண்டுகளுக்கான அரசாங்கத்தின் நிதி அதிகரிப்பு கணிப்புகள் மற்றும் குறைநிரப்பி இலக்குகள்.

(3) பொதுத் தனிசின் நிலைபெறுதகு மட்டத்தினை எய்தும் நோக்கத்துக்காக, இடைக் கால நிதி கட்டமைப்பானது 14 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான வருடாந்த ஆரம்ப மீதி இலக்கொன்றையும் 15 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான வரம்பினுள்ளான ஆரம்ப செலவின உச்சவரம்பினையும் தீர்மானித்தல் வேண்டும்.

(4) வருடாந்த வரவுசெலவுத்திட்டம் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான இடைக் கால நிதிக் கட்டமைப்பில் தரப்பட்டுள்ள ஆரம்ப மீதி இலக்கு மற்றும் ஆரம்ப செலவின உச்ச வரம்பு என்பவற்றுக்கிணங்கியிருத்தல் வேண்டும்.

**13.** (1) பத்தாம் பிரிவின் (அ) எனும் பந்தியில் குறிப்பீடுசெய்யப் பட்ட தனிசு குறைப்பு குறிக்கோள் 11 ஆம் பிரிவின் (5) உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியைப் பின்பற்றி நிதி செயல்நுணுக்க கூற்றில் குறித்துரைக்கப்பட்ட மட்டுப்பாடுகள் மற்றும் கால வரையறை என்பவற்றைப் பின்பற்றி பொது தனிசானது குறைக்கப்பட்டு நிலைபெறுதகு மட்டத்தில் பேணப்படுதல் வேண்டுமென்பதை அரசாங்கம் உறுதி செய்தல் வேண்டும் என தேவைப்படுத்துகின்றது.

*தனிசு குறைப்பு குறிக்கோள்*

(2) நிதி அமைச்சர் முறையே பிரிவுகள் 11 மற்றும் 12 என்பவற்றின்கீழ் குறித்துரைக்கப்பட்டதான நிதி செயல்நுணுக்க கூற்று அல்லது இடைக் கால நிதி கட்டமைப்பு என்பவற்றுக்கு தேவைப்படக்கூடியவாறான நிதி நிறைவேற்றுகை மற்றும் ஏனைய மீட்டல் என்பவற்றை கணக்கிலெடுக்கும் ஆண்டிறுதி அடிப்படையின்மீதான தனிசு நிலைபெறுதன்மை பகுப்பாய்வொன்றை தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் என்பவற்றை உறுதிப் படுத்துதல் வேண்டும்.

**14.** (1) தனிசு குறைப்பு குறிக்கோளுடன் ஒத்திசைவும் எதிர்வரும் நிதியாண்டு மற்றும் அடுத்துறும் நான்கு நிதியாண்டுகளுக்காக இடைக் கால நிதி கட்டமைப்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஆரம்ப மீதி இலக்கு பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-

*ஆரம்ப மீதி இலக்கு*

(அ) நிதி திட்டமிடல் மற்றும் கொள்கை அபிவிருத்தியின் எல்லா அம்சங்களையும் விளித்துரைப்பதற்கு இடைக் கால நிதி நங்கூரமொன்றாக சேவையாற்றுதல்; அத்துடன்

(ஆ) ஆண்டுதோறும் அவதானிக்கப்பட்ட நிதி பெறு பேறுகளை பிரதிபலிப்பதற்கு இற்றைப்படுத்துதலும் மற்றும் 10 ஆம் பிரிவிலுள்ள தனிசுக் குறைப்பு குறிக்கோளுடன் நடந்துகொண்டிருக்கின்ற ஒத்திசை வினை உறுதிப்படுத்துதல்.

(2) இடைக் கால நிதி கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்ட ஆரம்ப மீதி இலக்குடன் இணங்கியொழுகாமையின் அல்லது எதிர்பார்க்கப்பட்ட இணங்கியொழுகாமையின் விடயத்தில், நிதி அமைச்சர் பின்வருவனவற்றை விடயத்துக்கேற்ப, அத்தகைய இணங்கியொழுகாமை அல்லது எதிர்பார்க்கப்பட்ட இணங்கி யொழுகாமையின் தேதியிலிருந்து ஆறு கிழமைகளினுள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் வெளியிடுதலும் வேண்டும்–

(அ) ஆரம்ப மிகுதி இலக்குடன் இணங்கியொழுகாமைக்கான காரணங்களை விளக்குகின்ற மதிப்பீடொன்றை உள்ளடக்கிய அறிக்கையொன்று;

(ஆ) இற்றைப்படுத்தப்பட்ட இடைக் கால நிதி கட்டமைப் பொன்று; அத்துடன்

(இ) ஆரம்ப மிகுதி இலக்குடன் இணங்கியொழுகாத பட்சத்தில், தற்போதைய மற்றும் அடுத்த நிதி யாண்டில் ஆரம்ப மிகுதி இலக்குகளுடன் இணங்கி யொழுகலுக்கான திரும்பலுக்கான நிதி திட்டம்.

அரசாங்கத்தின் ஆரம்ப செலவினம்

**15.** (1) அரசாங்கத்தின் ஆரம்ப செலவினம் இயைபான நிதி ஆண்டுக்காக மதிப்பிடப்பட்ட பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பதின்மூன்று வீதத்தினை விஞ்சு தலாகாது.

(2) விடயத்துக்கேற்ப, நிதி அமைச்சரின் அமைச்சினால் கணக்கீடுசெய்யப்பட்ட பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியை எதிர்வுகூறுவது தொடர்பான கணக்கிடப்பட்ட பெயரளவிலான தொகையாக வெளிப்படுத்தப்பட்ட எதிர்வரும் நிதியாண்டு மற்றும் நான்கு அடுத்துறும் நிதியாண்டுகளுக்காக நடுத்தரகால நிதி கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்ட ஆரம்ப செலவின உச்சவரம்பானது பிரிவு 14 இல் குறித்துரைக்கப்பட்ட ஆரம்ப மீதி இலக்குடன் ஒத்ததாகவிருத்தலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்படி கணக்கிடப்பட்ட ஆரம்ப செலவின உச்சவரம்பு பின்வருவனவற்றுக்காக இருத்தல் வேண்டும்-

(அ) எதிர்வரும் நிதியாண்டுக்கு அதன் சமர்ப்பணம், அங்கீகாரம் மற்றும் நிறைவேற்றுகை இடம்பெற்ற நேரத்தில் எதிர்வரும் நிதியாண்டுக்கான வருடாந்த வரவுசெலவுத்திட்டத்துக்காக பிணிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) அடுத்துவரும் நான்கு நிதியாண்டுகளுக்கு இயைபான நிதியாண்டுகளுக்காக பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்காக தற்கால மதிப்பீடுகளைப் பிரதிபலிப்பதற்கு ஆண்டிறுதி அடிப்படையின்மீது இற்றைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் 14 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆரம்ப மீதி இலக்குடன் தொடர்ந்து ஒத்திருத்தலை உறுதிப் படுத்துதலும் வேண்டும்.

(4) ஆரம்ப செலவின உச்சவரம்பு இச்சட்டத்தின் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளின்பின்னர் உடனடியாக முதற்கட்டமாக மீளாய்வு செய்யப்படலாமென்பதுடன் அதன்பின்னரான ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் மீளாய்வு செய்யவும்படலாம்; அத்துடன் ஆரம்ப மிகுதி இலக்கு மற்றும் தனிசுக் குறைப்பு குறிக்கோள் என்பவற்றுடன் ஒத்திசைவாகவிருத்தல் பற்றி இற்றைப்படுத்தப்படுதல் வேண்டும்.

ஆரம்ப செலவின உச்ச வரம்பிலிருந்தான வேறுபாடு

**16.** (1) ஏதேனும் நிதியாண்டுக்கான நடுத்தர கால நிதி கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்ட ஆரம்ப செலவின உச்சவரம்பிலிருந்தான ஏதேனும் விலகலானது (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் மட்டுமே அரசாங்கத்தினால் செய்யப்படலாம் என்பதுடன் (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கமைந்ததாதலும் வேண்டும்.

(2) அரசாங்கம் வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட எவையேனும் எதிர்பாராத நிகழ்வுகளுக்கு அப்பால், மேலதிக, தற்காலிக மற்றும் இலக்குவைக்கப்பட்ட பொதுச்

செலவினம் என்பன அவசியப்படுகின்றதான, தேசிய பந்தோபஸ்து, தேசிய பொருளாதார பந்தோபஸ்து அல்லது பொது சுகாதாரம் மற்றும் நாட்டின் பாதுகாப்பு என்பவற்றுக்கு முக்கியமான அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகின்ற எதிர்பாராத நிகழ்வுகள் அல்லது இயற்கை அனர்த்தங்களில் மட்டுமே இடைக் கால நிதி கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்ட ஆரம்ப செலவின உச்ச வரம்பினை விஞ்சலாம்.

(3) நடுத்தர கால நிதி கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்ட ஆரம்ப செலவின உச்சவரம்பின் விஞ்சிய செலவினத்தை தேவைப் படுத்துகின்றது (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சூழ்நிலை எழுகின்றவிடத்து அல்லது எழக்கூடிய சாத்திய முள்ளவிடத்து, நிதி அமைச்சர் தீர்மானம் என்ற வழிவகைமூலம் இடைக் கால நிதி கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்ட ஆரம்ப செலவின உச்சவரம்பு பற்றிய விஞ்சுதலுக்காக ஆரம்ப செலவின உச்சவரம்பு மற்றும் குறைநிரப்பி ஒதுக்கீடுகளிலிருந்தான விலகலுக் காக பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை கோருதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கோரிக்கை ஆகக் குறைந்தது பின்வருவனவற்றுடன் சேர்க்கப்படுதல் வேண்டும் -

(அ) உதவித் தரவுகள் மற்றும் அச்சூழ்நிலைகள் எவ்வாறு விலகலை நியாயப்படுத்துகின்றன என்பன உள்ளடங்க லாக எத்தகைய சூழ்நிலைகளின் பின்னர் அத்தகைய விலகல்கள் ஏற்பட்டன என்பதை விளக்கு கின்ற கூற்றொன்று;

(ஆ) மேலதிக செலவிடுகை, ஆரம்ப செலவு உச்ச வரம்புடன் இணங்கியொழுகுவதற்கு மீண்டு திரும்புவதற்கு நிதி அமைச்சரினால் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அத்தகைய இணங்கியொழுகுவற்கு மீண்டும் திரும்புவதற்கு கால வரையறை என்பன உட்பட (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளை முகாமை செய்வதற்காக எடுக்கப்பட வேண்டிய தகவல்களையும் இலக்கிடப்பட்ட நடவடிக்கைகளையும் கொண்டிருக்க வேண்டிய மீட்டெடுப்பு திட்டமொன்று;

(இ) 26 ஆம் பிரிவிற்கு ஏற்ப குறைநிரப்பி மதிப்பீட்டு முன்மொழிவு ஒன்று ; அத்துடன்

(ஈ) இற்றைப்படுத்தப்பட்ட நடுத்தர கால நிதி கட்டமைப்பு.

(5) நான்காம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்கள் நிதி அமைச்சரின் அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தின் மீது வெளியிடப்படுதல் வேண்டும்.

**17.** (1) ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் நிலுவையிலுள்ள அரசாங்க உத்தரவாதங்களின் திரள் இருப்பானது (இதனகத்துப் பின்னர் "உத்தரவாத மட்டுப்பாடு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இயைபான நிதியாண்டினதும் முற்போந்த நிதியாண்டுகளினதும் சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.5 சதவீதத்தை விஞ்சுதலாகாது. உத்தரவாத மட்டுப்பாடு

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட உத்தரவாத மட்டுப்பாடு இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்குப்பின்னர் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் நிதி செயல்நுணுக்க கூற்றில் குறித்துரைக் கப்பட்ட தனிசு குறைப்பு குறிக்கோளுடன் ஒத்திசைதலை உறுதிப்படுத்துவதனை இற்றைப்படுத்துதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட உத்தரவாத மட்டுப்பாட்டின் மீறுகையின் விடயத்தில், நிதி அமைச்சர் ஆகக் குறைந்தது பின்வருவனவற்றை குறித்துரைக்கின்ற அறிக்கை யொன்றை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென் பதுடன் நிதிஅமைச்சரின் அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தின் மீது வெளியிடுதலும் வேண்டும் -

(அ) அத்தகைய மீறலுக்கான காரணம்; அத்துடன்

(ஆ) எதிர்காலத்தில் உத்தரவாத மட்டுப்பாட்டுடன் இணங்கியொழுகுதலை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள்.

## பாகம் IV

## வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தலும் அங்கீகரித்தலும்

*வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் பரப்பெல்லை*

**18.** (1) வருடாந்த வரவு செலவுத் திட்டமானது செலவுத் தலைப்பு இலக்கங்களுக்கு ஒதுக்கப்பட்டதான பகிரங்க உருவகங்களின் செலவின மதிப்பீடுகளை உள்ளடக்குதல் வேண்டும்.

(2) வருடாந்த வரவு செலவுத் திட்டமானது -

(அ) செலவுத் தலைப்புகளினால் ஒதுக்கீட்டுப் படிவத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறைகளுக்கிணங்க வகுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) ஒதுக்கீட்டுச் சட்டமானது அரசியலமைப்பின் 150, 151 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளுக்கமைய, திரட்டு நிதியத்திலிருந்து செலவினங்களை எதிர்நோக்கியிருத்தல் வேண்டும்.

*நிதி பொறுப்புடைமை தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல்*

**19.** (1) பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மற்றும் வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டு வரைவு என்பன இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க விருத்தி செய்யப்பட்ட நிதி செயல்நுணுக்க கூற்று மற்றும் நடுத்தர கால நிதி கட்டமைப்பு என்பவற்றுடன் ஒத்தனவாகவிருத்தல் வேண்டும்.

(2) வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டு வரைவு விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் முன்வைக்கப்படுதல் வேண்டும்:-

*வருடாந்த வரவுசெலவுத் திட்ட ஆவணம் மற்றும் அதனுடன் ஒன்றிணைந்த ஆவணங்கள்*

**20.** (1) வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஆவணம் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) (இதனகத்துப்பின்னர் "ஆண்டிறுதி வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவங்களில் உள்ள அரசிறை மற்றும் செலவினங்களின் மதிப்பீடுகள்; அத்துடன்

(ஆ) மற்றவற்றுக்கிடையில், செலவினம் மற்றும் கடன் பெறுகையின் உச்சவரம்பு பற்றிய மதிப்பீடுகள் என்பன உள்ளடங்குகின்ற ஒதுக்கீட்டுச் சட்டம்.

(2) வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஆவணம் பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் :-

(அ) அரசாங்க நிதிக் கொள்கையின் வருடாந்த வரவு செலவுத்திட்டம் மற்றும் ஒட்டுமொத்த உந்துதல் என்பவற்றின் உள்ளடக்கங்களை சுருக்கி கூறுகின்ற வரவுசெலவுத்திட்ட உரை;

(ஆ) வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் பிரதான அம்சங்களின் இலகுவாக விளங்கிக்கொள்ளகூடிய சுருக்கமொன்றை கொண்டுள்ள வரவுசெலவுத் திட்டத்தின் பொது மக்களுடன் நட்புரீதியான பதிப்பு;

(இ) நிதி செயல்நுணுக்க கூற்று மற்றும் வரவுசெலவுத்திட்ட பொருளாதார மற்றும் நிதி நிலைமை பற்றிய அறிக்கை;

(ஈ) நடுத்தரகால தனிசு முகாமைத்துவ செயல்நுணுக்கம் மற்றும் வருடாந்த கடன்வழங்கும் திட்டம்;

(உ) பிரிவு 45 இன் (1) ஆம் உட்பிரிவுக்கிணங்க பொது-தனியார் பங்காண்மை கருத்திட்டங்களை உள்ளடக்கிய நிகழ்ந்துகொண்டிருக்கும் மற்றும் புதிதாக அங்கீகரிக்கப்பட்ட பகிரங்க முதலீட்டு கருத்திட்டங்கள் பற்றிய பட்டியல்;

(ஊ) பகிரங்க தனியார் பங்காண்மை கருத்திட்டங்களுடன் தொடர்புடையவற்றை உள்ளடக்குகின்ற அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிலுவையிலுள்ள கடன்கள்

மற்றும் நிலுவையிலுள்ள உத்தரவாதங்கள் மற்றும் அரசாங்கத்தின் எதிர்பாராத நிகழ்வும் பொறுப்புகள் பற்றிய பட்டியல்;

(எ) வரவுசெலவுத்திட்ட உருவகங்கள் பற்றிய பகிரங்க சேவைத் தொழில் பற்றிய சுருக்கமொன்று;

(ஏ) ஏலவேயுள்ள வரிச்செலவினங்களின் மொத்த ஆகுசெலவு மற்றும் புதிய வரி செலவினங்களின் வெளிப்படுத்துகை உள்ளடங்கலான வரிச்செலவினங்கள் பற்றிய கூற்றொன்று; அத்துடன்

(ஐ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறான அல்லது நிதியமைச்சரினால் தோதானதென கருதப்படக்கூடியவாறான வேறு எவையேனும் ஆவணங்கள் அல்லது தகவல்கள்.

வருடாந்த வரவு செலவுத்திட்ட செயல்முறை

**21.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்துக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒவ்வொரு வரவுசெலவுத்திட்ட உருவகமும் வருடாந்த வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டதான ஆண்டுக்கு முற்போந்த நிதியாண்டின் யூலை மாதத்தின் முப்பதாம் நாளுக்குப் பிந்தாமல் வரவுசெலவுத்திட்ட அழைப்பு சுற்றறிக்கையுடன் இணங்கி அவர்களுடைய வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரித்து சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) வரவுசெலவுத்திட்ட அழைப்பு சுற்றறிக்கை –

(அ) பிரிவு 12 இன்கீழ் தேவைப்படுத்தப்பட்டதான நடுத்தர கால நிதிசார் கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்ட ஆரம்ப செலவின உச்சவரம்புடன் இசைந்தொழுகு கின்ற நிதியாண்டைப் பிணிக்கின்றதான செலவின உச்ச வரம்புகளை உள்ளடக்குதல் வேண்டும் ;

(ஆ) விபரமான கொள்கை வழிகாட்டுதலை உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன் இணங்கியொழுகப்பட வேண்டிய பிரதான செயல்கள் மற்றும் வருடாந்த வரவுசெலவுத்

திட்ட செயல்முறையினுள் பகிரங்க உருவகங்களினால் ஏற்பாடுசெய்யப்படும் தகவல்களை பட்டியலிடுதல் மற்றும் இப்பிரிவுக்கு ஏற்ப அத்தகைய செயல்களுக்கு காலவரையறையை எடுத்துக்கூறுதல் வேண்டும் ;

(இ) நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட பகிரங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை உள்ளடக்குதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) திறைசேரிக்கான செயலாளரினால் அவசியமாக கருதக்கூடியவாறான ஏனைய அறிவுறுத்தல்கள் மற்றும் தகவல்களை உள்ளடக்குதல்.

(3) நிதி அமைச்சர் பாராளுமன்றத்துக்கு வருடாந்த வரவு செலவுத்திட்ட ஆவணத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர் அதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

(4) நிதி அமைச்சர் வருடாந்த வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படுவதற்கான முற்போந்த ஆண்டுக்கான ஆண்டின் ஒக்டோபர் பதினைந்தாம் நாளுக்கும் பிந்தாமல் பாராளுமன்றத்துக்கு உடன் அடுத்துவரும் நிதியாண்டுக்கு ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) நிதி அமைச்சர் ஆண்டிறுதி வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டதான ஆண்டின் நவெம்பர் மாதம் பதினைந்தாம் நாளுக்குப் பிந்தாமல் பாராளுமன்றத்துக்கு 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து 20 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளின்கீழ் வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஆவணத்தை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் நிதி அமைச்சரின் அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் அதே நாளன்று அதற்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட வரைவு ஆவண மற்றும் ஆவணங்களுடன் சேர்த்து வெளியிடுதலும் வேண்டும்.

(6) திறைசேரிக்கான செயலாளர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துடனான கலந்தாலோசனையின் பேரில் மற்றும் அமைச்சரவை அங்கீகாரத்துடனும் குறித்த தேதிகளுடன் அடுத்

துறும் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை முன்வைத்து அங்கீகரித்தல் தொடர்பில் வரவுசெலவுத்திட்ட செயல்முறையை அறிவித்தல் வேண்டும்.

*வருடாந்த வரவுசெலவுத் திட்ட செயல்முறையில் நிதி அமைச்சர் மற்றும் திறைசேரிக்கான செயலாளர் என்போரின் பொறுப்புகள்*

**22.** (1) நிதி அமைச்சர் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பானவராகவிருத்தல் வேண்டும்–

(அ) வருடாந்த வரவுசெலவுத்திட்ட செயல்முறையை நடைமுறைப்படுத்துதல்;

(ஆ) ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மற்றும் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்; அத்துடன்

(இ) நடுத்தரகால நிதி கட்டமைப்பு மற்றும் வரவு செலவுத் திட்ட கட்டமைப்பு என்பவற்றுக்கிணங்க வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஆவணத்தை தயாரித்தல்.

(2) திறைசேரிக்கான செயலாளர் வருடாந்த வரவுசெலவுத் திட்டம் தயாரிப்பதற்கான முற்போந்த ஆண்டுக்கான நிதியாண்டின் யூன் முப்பதாம் நாளுக்குப் பிந்தாமல் வரவுசெலவுத்திட்ட அழைப்பு சுற்றறிக்கையை வழங்குவதற்கு பொறுப்பானவராகவிருத்தல் வேண்டும்.

*கணக்கு மீதான வாக்கு*

**23.** (1) நடைமுறை ஆண்டின் திசெம்பர் முப்பதாம் நாளில் பாராளுமன்றத்தினால் அடுத்துறும் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் அங்கீகரிக்காத பட்சத்தில், நிதி அமைச்சர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் கருத்திட்டங்களுக்காக பாராளுமன்றம் நிதிகள் ஒதுக்கியுள்ளதன்கீழ் பாராளுமன்றத்துக்கு கணக்குமீதான வாக்கொன்றை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் பேணப்படுவதற்கு தேவைப்பட்டதான குறித்துரைக்கப்பட்ட பகிரங்க சேவைகளை தொடர்ந்து வழங்குதலும் வேண்டும்.

(2) கணக்குமீதான வாக்கின்கீழ் ஒதுக்கப்பட்டதான செலவினத்துக்கான காலப்பகுதி நான்கு மாதங்களை விஞ்சுதலாகாது என்பதுடன் கணக்கு மீதான வாக்கு பற்றிய செலவினத்தை ஒன்றிணைக்கின்றதான ஒதுக்கீட்டுச் சட்டத்தை ஏற்றல்மூலம் பின்பற்றப்படுதலும் வேண்டும்.

## பாகம் V

## ஆண்டின்போது வருடாந்த வரவுசெலவுத்திட்டத்துக்கான சீராக்கல்கள்

மாற்றல் செயல்முறை

**24.** (1) வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தில் செலவினத் தலைப்பினுள் ஒதுக்கீட்டை கைமாற்றுதல் (இதனகத்துப்பின்னர் "மாற்றல் செயல்முறை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இப்பிரிவின் (2), (3) மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய ஒதுக்கீட்டுச் சட்டத்தில் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகப்படுதல் வேண்டும்.

(2) செலவிடப்படாத வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டை கைமாற்றுதலானது பின்வருவனவற்றுக்காக அனுமதிக்கப்படுதலாகாது-

(அ) மற்றொரு செலவினத் தலைப்புக்கு செலவினத் தலைப்பிலிருந்து; அல்லது

(ஆ) மீண்டுவரும் செலவினத்துக்கு மூலதனச் செலவினத்திலிருந்து.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவற்றுக்கு மேலதிகமாக, மாற்றல் செயல்முறை பயன்பாட்டின்மீதான மட்டுப்பாடுகள் விதித்துரைக்கப்படக்கூடியவாறாகவிருத்தல் வேண்டும்.

(4) மாற்றல் செயல்முறையைப் பயன்படுத்தி ஒதுக்கீட்டை கைமாற்றலானது எல்லா வரவுசெலவுத்திட்ட உருவகங்களினால் விளைவாக்கப்பட்டவை ஏதேனுமிருப்பின், நிதி அமைச்சரினால் சொல்லப்பட்ட கைமாற்றல் தேதியிலிருந்து ஆறு மாதங்களினுள் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும். அத்தகைய அறிக்கையிடல் பற்றிய நடவடிக்கைகள் விதித்துரைக்கப்படக்கூடியவாறாகவிருத்தல் வேண்டும்.

வருடாந்த வரவுசெலவுத் திட்ட ஒதுக்கு

**25.** (1) ஒதுக்கீட்டுச் சட்டம் நிதியாண்டுக்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கு என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான எதிர்பாராத நிகழ்வுகளுக்கான ஒதுக்கீடொன்றை உள்ளடக்கலாம்.

(2) வருடாந்த வரவுசெலவுத்திட்ட குறித்தொதுக்கத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ஆரம்ப செலவினத்தின் உத்தேசிக்கப்பட்ட மதிப்பீட்டின் இரண்டு சதவீதத்தினை விஞ்சுதலாகாது.

(3) வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கிலுள்ள நிதியங்கள் எழுத்திலான சட்டங்களில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதான அவசரமான, எதிர்வுகூறப்படாத மற்றும் தவிர்க்கமுடியாத தேவைப்பாடுகளை மற்றும் ஏலவேயுள்ள குறித்தொதுக்கங்கள் போதுமானதாகவில்லாதவிடத்தான செலவினங்களையும் மேவுவதற்கு குறித்தொதுக்கப்படலாம்.

(4) வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கிலிருந்தான ஏதேனும் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அங்கீகரிக்கப் படுதல் வேண்டுமென்பதுடன் இரண்டு மாதங்களினுள் பாராளு மன்றத்துக்கு அறிக்கையிடப்படுதலும் வேண்டும்.

*குறைநிரப்பி மதிப்பீடுகள்*

**26.** (1) குறைநிரப்பி மதிப்பீட்டு உத்தேசமொன்று பின்வரும் நிபந்தனைகள் இடம்பெறுவதன்மேல், விதித்துரைக்கக்படக்கூடிய வாறான முறையில் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) பாரிய பொருளாதார வீழ்ச்சி, கடுமையான வெளிநிலை அதிர்ச்சிகள், இயற்கை அனர்த்தம், பாரிய எதிர்பாரா செலவு பொறுப்புகள் எழல் அல்லது அமைச்சரவையின் வேறு எவையேனும் கருத்தின் பிரகாரம் இறுதியில் அபிப்பிராயத்தில் அத்தகைய செலவுகள் போன்ற எதிர்பார்க்காத சூழ்நிலைகள் ஏற்படும் பட்சத்தில்;

(ஆ) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டத்தில் செலவுத் தலைப்புகளில் மேவப்படாத அவ்வாண்டின்போது மேலதிக செலவினங்கள் உறப்படுவதற்கு வரவு செலவு உருவகத்துக்கு அவசியமாக அது வருகின்றமை ; அத்துடன்

(இ) அத்தகைய செலவினத்துக்கு பின்வருவனவற்றி னூடாக வழங்கப்படுவதற்கான சாத்தியமில்லா போது —

(i) இருபத்திநான்காம் பிரிவில் வழங்கப்பட்ட வாறான மாற்றல் நடவடிக்கை;

(ii) அரசியலமைப்பின 151 ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட எதிர்பாரா நிகழ்வு நிதியம்; அல்லது

(iii) இருபத்தைந்தாம் பிரிவில் ஏற்பாடு செய்யப் பட்டவாறான வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கிலிருந்தான குறித்தொதுக்குதலொன்று.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறைநிரப்பு மதிப்பீட்டு உத்தேசமானது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:-

(அ) அண்மைய பேரினப் பொருளாதார மற்றும் நிதி அபி விருத்திகள் பற்றிய மேலோட்டப் பார்வை;

(ஆ) வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் அரசிறைகள் மற்றும் செலவினங்கள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட எதிர்வுகூறல்கள்;

(இ) தனிப்பட்ட செலவினத் தலைப்புகளுக்கான ஒதுக்கீடு களுக்கான மாற்றங்கள் பற்றிய விளக்கம்; அத்துடன்

(ஈ) மேலதிக நிதியளிப்புக்கான மூலங்கள் மற்றும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஏனைய வேறு தகவல்கள்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் மேலதிக செலவினங்களுக்கான கோரிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**27.** (1) ஏதேனும் நிதியாண்டிற்காக அரசாங்க கணக்குகள் மூடுமிடத்து, வரவுசெலவுத்திட்ட குறித்தொதுக்குகள் செலவளிக் கப்பட்டுள்ளன என கண்டறியும்போது — மிகைச் செலவினம்

(அ) இயைபான ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் ஒதுக்கப்பட்ட எதிர்பாராத நிகழ்வுகள் நிதியத்தி லிருந்து

அல்லது குறைநிரப்பி மதிப்பீட்டிலிருந்தான தொகையை விட விஞ்சாததாக இருக்கும் பொழுது; அல்லது

(ஆ) வரவுசெலவுத்திட்ட குறித்தொதுக்குதல் செய்யப் பட்டதான நோக்கத்துக்காக,

அத்தகைய மேலதிக தொகையானது அதிகாரமளிக்கப்படாத மிகையான செலவினமாக பரிகரிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுகள், இயைபான வரவுசெலவுத்திட்ட உருவகமானது நிதியாண்டின் முடிவின் பின்னர் தொண்ணூறு நாட்களுக்குப் பிந்தாமல் விதித் துரைக்கப்படக்கூடியவாறான தகவல்களை அது உள்ளடக்கி யுள்ளதான வருடாந்த நிதிக் கூற்றுடன் இணைக்கப்பட்ட மிகைச் செலவினம் பற்றிய கூற்றொன்றை பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்படாத மிகைச் செலவினம் பொறுப்பான அலுவலர்களுக்கெதிரான ஒழுக்காற்றுச் செயலுக்கான ஏதுவாக விருத்தல் வேண்டும்.

## பாகம் VI

### வரவுசெலவுத்திட்ட நிறைவேற்றம்

ஆணைப் பத்திரம்

**28.** (1) எதிர்பாரா செலவுப் பொறுப்பு உள்ளடங்கலாக, ஏதேனும் நிதிசார் அர்ப்பணிப்பு அல்லது பொறுப்பு அரசியலமைப்பின் 150 ஆம் உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்ட நிதியமைச்சரினால் செலவினத்தை அதிகாரமளிக்கின்ற ஆணைப்பத்திரமின்றி, வரவுசெலவுத்திட்ட உருவகமொன்றினால் உறப்படுதலாகாது.

(2) பகிரங்க உருவகமொன்றின் பிரதான கணக்கீட்டு அலுவலர் அல்லது கணக்கீட்டு அலுவலர் ஆணைப்பத்திரத்தில் அடங்கியுள்ள அதிகாரத்துடன் செலவினம் இணங்கியொழுகப் படவேண்டியதை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பாதல் வேண்டும். அதிகாரசபையுடன் இசைந்தொழுகாத ஏதேனும்

செலவினம் திறைசேரிக்கான செயலாளரினால் அனுமதிக்கப் படுதலாகாதென்பதுடன் பொறுப்பான அலுவலர்கள்மீது மிகை விதிப்பனவு செய்யப்படலாம்.

(3) செலவினத்தை அதிகாரமளிக்கின்ற ஆணைப்பத்திரங்கள் அவை தொடர்புடையதான நிதியாண்டின் முடிவில் முதிர்வடைதல் வேண்டும்.

**29.** (1) பகிரங்க நிதியங்களின் ஏதேனும் செலவினம் பின்வரும் படிமுறைகளுக்கமையச் செய்யப்படுதல் வேண்டும்:- செலவினக் கட்டுப்பாட்டு முறைமை

(அ) தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்தான முன் அதிகாரமளிப்பு;

(ஆ) தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்தான முன் அங்கீகாரம்;

(இ) தகுதிவாய்ந்த அதிகாரியினாலான அர்ப்பணிப்பு;

(ஈ) தகுதிவாய்ந்த அதிகாரியின் மூலமான சான்றுறுதிப்படுத்தல்; அத்துடன்

(உ) இயைபான பகிரங்க உருவகத்தினால் செய்யப்பட்ட கொடுப்பனவு.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக, தகுதிவாய்ந்த அதிகாரி என்பது இயைபான பகிரங்க உருவகத்தின் கணக்கீட்டு அலுவலரினால் செய்யப்படும் அதிகாரவளிப்பு, அங்கீகாரம், அர்ப்பணிப்பு, சான்றுப்படுத்தல் அல்லது கொடுப்பனவு போன்ற பணிகள் கையளிக்கப்பட்டவரான எவரேனும் ஆள் எனப் பொருள்படும்.

(3) கணக்கீட்டு அலுவலர்கள் தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஒன்றில் பொதுவாக அல்லது அது தொடர்பில் பணிகளை கையளிக்கலாமென்பதுடன் அதிகாரம் கையளிக்கப்பட்டவரின் தகுதியையும் கையளிப்பு முறைமையில் உள்ளக சரிபார்த்தலின் போதுமான தன்மையையும் உறுதிப்படுத்துவதற்காக பொறுப்பானவராகவிருத்தல் வேண்டும்.

(4) அர்ப்பணிப்புகளின் அங்கீகாரங்கள் அர்ப்பணிப்புடன் செய்யப்பட்டவற்றுக்கு எதிராகவுள்ள வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் போதுமான சுமையற்ற ஒதுக்கீட்டின் கிடைக்கப் பெறுதன்மைக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(5) செலுத்துவதற்கான கடப்பாடு மூன்றாம் திறத்தவர்களிடமிருந்து தகுதிவாய்ந்த அதிகாரியினால் வேலைகள், பண்டங்கள் அல்லது சேவைகள் பெறப்படும்போது, எழுதல் வேண்டும்.

(6) வரவுசெலவுத்திட்ட உருவகமொன்றினால் செய்து கொள்ளப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட செலவின அர்ப்பணிப்பொன்றை உறக்கூடியதான ஏதேனும் ஒப்பந்தம் அல்லது வேறு ஒழுங்கேற்பாடு விதித்துரைக்கப்பட்டவாறான முறையில் நிதிசார் முகாமைத்துவ தகவல்முறைமையில் செய்துகொள்ளப்படுதல் வேண்டும்.

(7) நிதி அமைச்சர் இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று ஏலவேயுள்ளதான செலவின அர்ப்பணிப்புகளின் நிலுவையை தொடர்ச்சியாக குறைப்பதற்கான செயல்நுணுக்க விடுவிப்பொன்றை தாபித்தல் வேண்டுமென்பதுடன் நிலுவைகளின் திரட்டுகையை தடுப்பதற்கான நுட்பங்களை விரிவுபடுத்துதலும் வேண்டும்.

வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தின் முதிர்வு மற்றும் காலாவதியான கொடுப்பனவு

**30.** (1) வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட பணங்களை செலவழிப்பதற்கான அதிகாரம் அத்தகைய தொடர்புபட்ட வருடாந்த வரவுசெலவுத்திட்டத்துக்கான நிதியாண்டின் முடிவில் காலாவதியாதல் வேண்டுமென்பதுடன் பயனுறுதலானது இல்லாதொழிதலும் வேண்டும்.

(2) உரிமைக் கோரிக்கை எழுகின்றதான நிதியாண்டொன்றின் திசெம்பர் முப்பத்தோராம் நாளுக்குமுன்னர் கொடுத்துத் தீர்க்கப்படாத உரிமைக் கோரிக்கையொன்றின் விடயத்தில், அத்தகைய உரிமைக் கோரிக்கை அடுத்த நிதியாண்டில் “செலவினக் கோவை” என்பதற்கு நேரொத்ததாக கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும். அத்தகைய கொடுத்துத் தீர்ப்பதற்கான நடவடிக்கையானது விதித்துரைக்கப்படக்கூடியவாறாகவிருத்தல் வேண்டும்.

பல் ஆண்டு செலவின அர்ப்பணிப்புகள்

**31.** (1) நிதி அமைச்சர் ஏதேனும் இயைபான ஆண்டின் வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட பல் ஆண்டு செலவின அர்ப்பணிப்புகள் நடுத்தர நிதிக் கட்டமைப்புடன் இசைந்தொழுகுதலை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) உரிய வரவுசெலவுத்திட்ட உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர் பல் ஆண்டு செலவின அர்ப்பணிப்புகளில் ஈடுபடுவதற்குமுன்னர் அமைச்சரவையிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக “பல் ஆண்டு செலவின அர்ப்பணிப்புகள்” என்பது இயைபான நிதியாண்டை அடுத்துறுகின்ற நிதியாண்டுகளின் ஒதுக்கீட்டுச் சட்டங்களிலிருந்து ஒதுக்கீட்டை தேவைப்படுத்துகின்றதான கொடுத்துத் தீர்த்தலின் செலவின அர்ப்பணிப்பு என்று பொருளாகுமென்பதுடன் பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டங்கள் மற்றும் ஏனைய முதலீடுகள் மற்றும் நிதியளிப்பு ஒழுங்கேற்பாடுகளின் கீழ் மீண்டுவரும் ஆகுசெலவுகள், அரசாங்கத்தின் கடப்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட பகிரங்க முதலீட்டுக் கருத்திட்டங்களை உள்ளடக்குதலும் வேண்டும்.

பெறுகை

**32.** (1) ஒவ்வொரு பகிரங்க உருவகமும் தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட எழுத்திலான சட்டங்கள் மற்றும் வழிகாட்டுநெறிகளில் குறித்துரைக்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுடன் இணங்கியொழுகுவதற்கு பண்டங்கள், சேவைகள், வேலைகள், ஆலோசனைச் சேவைகள் மற்றும் தகவல் முறைமைகளை பெறுதல் வேண்டும்.

(2) (அ) பிரிவு 3 இன் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு பகிரங்க உருவகமும் அதன் வருடாந்த பெறுகை திட்டங்களை திறைசேரிக்கான செயலாளருக்கு தயாரித்து வழங்குவதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் மற்றும் (iii) ஆம் உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு பகிரங்க உருவகம் உரிய பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு அவர்களுடைய வருடாந்த பெறுகை திட்டங்களை தயாரித்து வழங்குவதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) தேசிய பெறுகை ஆணைக்குழு அவசியமெனக் கருதின், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் மாகாண சபைகள் என்பவற்றுக்கு குறித்த வழிகாட்டுநெறிகளை வகுத்தமைத்து வர்த்தமானியில் வெளியிடலாம்.

உள்ளக கணக்காய்வு

**33.** (1) உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பகிரங்க உருவகமொன்றின் தொடர்பில் பிரதான கணக்கீட்டு அலுவலர் அல்லது கணக்கீட்டு அலுவலர் அல்லது ஆளும் குழு ஒவ்வொன்றும் சுயாதீனமாக பணிகளை உள்ளக கணக்காய்வாளர் நிறைவேற்றுகின்றாரென்பதுடன் முரண்பாட்டு அக்கறைக்கு இட்டுச்செல்லக்கூடிய பணியொன்றுடன் குறித்தளிக்கப்படவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) உள்ளக கணக்காய்வாளர் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளை பின்பற்றுதல் வேண்டுமென்பதுடன் இயைபான பகிரங்க உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு அல்லது கணக்கீட்டு அலுவலருக்கு அல்லது ஆளும் குழுவுக்கு உரிய செலவின தலைப்பு மீதான அத்தகைய கண்டறிதல்களை எடுத்துக்கூறி அறிக்கையொன்று சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிக்கையின் பிரதிகள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் 41 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி கணக்காய்வு முகாமைத்துவம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான திணைக்களத்துக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) திறைசேரிக்கான செயலாளர் உள்ளக கட்டுப்பாடுகள், உள்ளக கணக்காய்வுகள் என்பவற்றை வலுப்படுத்துவதற்கும் பகிரங்க உருவகங்களின் முகாமைத்துவ குழுக்களைக் கணக்காய்வு செய்வதற்குமான பணிப்புரைகளை வழங்குதல் வேண்டும்.

## பாகம் VII

### நிதி முகாமைத்துவம்

திறைசேரி பணவோட்ட முகாமைத்துவம் மற்றும் திறைசேரி ஒற்றைக் கணக்கு முறைமை

**34.** (1) (அ) திறைசேரிக்கான செயலாளரினால் தலைமை தாங்குகின்ற பணவோட்டம் பற்றிய முகாமைத்துவக் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் திறைசேரியிலுள்ள பிரதிச் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் மற்றும் பின்வரும் அரசிறை திணைக்களங்களின் தலைவர்கள் என்போரை உள்ளடங்கியிருத்தல் வேண்டும்:-

(i) சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ii) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமை யதிபதி; அத்துடன்

(iii) மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி.

(ஆ) பந்தி அ வில் குறித்துரைக்கப்பட்ட குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள், பொறுப்புகள் மற்றும் தொழிற்பாடு என்பன விதித்துரைக்கப்படக்கூடியவாறாகவிருத்தல் வேண்டும்.

(2) பிரிவு 3 இன் 2 ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) மற்றும் (ii) என்னும் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட பகிரங்க உருவகங்களினால் பெறப்பட்ட பணங்கள் உட்பட, எல்லா அரச பணங்களிலும் வங்கிக்கணக்குகளில் ஒன்றிணைக்கப்பட்ட முறைமையொன்றாக இருக்கக்கூடியதான திரட்டு நிதியத்தின் அரசிறை மற்றும் செலவினத்தைப் பேணுவதற்கு திறைசேரி ஒற்றைக் கணக்கொன்று இருத்தல் வேண்டும். அது வைப்பிலிடப்படுதலும் வேண்டும். அத்துடன் அரசாங்கத்தின் மற்றும் அத்தகைய பகிரங்க உருவகங்களின் செலவினம் திரட்டப்பட்டமுறையில் முகாமை செய்யப்படுவதற்கு பகிரங்க நிதியங்களை இயலச் செய்வதற்கு செய்தலும் வேண்டும்.

*பகிரங்க நிதியை குறித்தொதுக்கு வதற்காக வங்கிக் கணக்குகளை திறத்தலும் மூடுதலும்*

**35.** (1) திறைசேரிக்கான செயலாளர் அல்லது திறைசேரிக்கான செயலாளரின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் அரசாங்கத்தினுடைய பணம் மற்றும் திரவத் தன்மையான தேவைப்பாடுகளை முகாமைசெய்யும் நோக்கத்துக்காக அலுவல முறையான வங்கிக்கணக்குகளை திறத்தலும் பேணுதலும் மற்றும் மூடிவிடுதலும் வேண்டும்.

(2) திறைசேரி ஒற்றைக் கணக்குக்கு அமைந்ததாகவிராத பகிரங்க உருவகமொன்றின் ஆளும் குழு அத்தகைய பகிரங்க உருவகம் தாபிக்கப்பட்டதன் கீழான இயைபான சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய பகிரங்க உருவகத்தின் பகிரங்க நிதியத்தை குறித்தொதுக்கும் நோக்கத்துக்காக வங்கிக் கணக்குகளை திறப்பதற்கும், பேணுவதற்கும் மூடிவிடுவதற்குமான தத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலக வங்கிக் கணக்குகளை திறப்பதற்கும் மூடிவிடுவதற்கான விபரங்கள் விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

*தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட் பத்தின் பயன்பாடு*

**36.** (1) பொதுத் திறைசேரியின் பணிகளை மற்றும் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றவதற்காக வினைத்திறன்மிக்க கணினிமயப்படுத்தப்பட்ட முறைமையொன்று அபிவிருத்திசெய்யப்படுதல் வேண்டும்.

(2) பகிரங்க உருவகத்தின் கணிணிமயப்படுத்தப்பட்ட நிதிசார் முகமைத்துவம் மற்றும் ஏனைய தகவல் முறைமைகள் பற்றிய நிறைவேற்றம், பாதுகாப்பு, காப்பு மற்றும் செம்மை என்பன விதித்துரைக்கப்பட்டவாறு காலாகாலமாக மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்படுவதன் மூலம் உறுதிசெய்யப்படுதலும் வேண்டும்.

*அரசாங்கத் துக்குச் செய்யப்படும் வெளிநாட்டு மானியக் கொடைகள் மற்றும் உள்நாட்டு மானியக் கொடைகள்*

**37.** (1) திறைசேரிக்கான செயலாளர் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கமைய, பகிரங்க உருவகமொன்று அத்தகைய உடன்படிக்கைகளில் கையொப்பமிடுவதற்கும் மற்றும் அத்தகைய மானியக்கொடைகளை பெறுவதற்கும் எழுத்தில் அமைச்சரவை யினால் அதிகாரமளிக்கப்படுமிடத்தினாலன்றி, வெளிநாட்டு மானியக் கொடைகள் அல்லது அரசாங்கத்தின் சார்பில் வெளிநாட்டு மானியக் கொடைகள் நன்கொடையாளர்களிட மிருந்து

அல்லது உள்நாட்டு நன்கொடையாளர்களிடமிருந்து ஏதேனும் மானியக்கொடையை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பில் வெளிநாட்டு அரசாங்கங்கள் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்புகளுடன் எல்லா உடன்படிக்கைகளையும் கையொப்பமிடுவ தற்கான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) (இப்பிரிவில் வெளிநாட்டு மானியக் கொடைகள் என குறிப்பீடு செய்யப்படும்) வெளிநாட்டு அரசாங்கம், சர்வதேச ஒழுங்கமைப்பு அல்லது ஏனைய வெளிநாட்டு நன்கொடையாள ரிடமிருந்து அல்லது உள்நாட்டு நன்கொடையாளரிடமிருந்து அரசாங்கத்துக்கு மானியக் கொடைகளாக பெறப்பட்ட நிதியங்கள் –

(அ) திரட்டுநிதியத்தில் வரவுவைக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) மானிய கொடையை நிறைவேற்றுவதற்கு பொறுப்பான பகிரங்க உருவகத்தின் வருடாந்த வரவுசெலவுத் திட்ட வரைவில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் ஏதேனும் வகையில் மானியக் கொடையைப் பெறுகின்ற ஏதேனும் பகிரங்க உருவகம் இயைபான எழுத்தி லான சட்டத்துக்கிணங்க அத்தகைய மானியக்கொடையின் பணப்பெறுமதியை தீர்மானித்தலும் பதிவுசெய்தலும் வேண்டும்.

(4) வெளிநாட்டு மானியக்கொடைகள் அல்லது உள்நாட்டு மானியக்கொடைகள் என்பவற்றின் பெறுவனவுக்கான தேவைப் பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் என்பன விடயத்துக்கேற்ப, விதித்துரைக்கப்படக்கூடியவாறாகவிருத்தல் வேண்டும்.

சொத்து முகாமைத்துவம்

**38.** (1) அவர்களுடைய அடையாளங்காணல், வகுதிப்படுத்தல் பெறுமதியிடல், பயன்படுத்துதல் மற்றும் அகற்றுதல் உள்ளடங்கலாக பிரிவு 3 இன் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i), (ii) மற்றும் (iii) ஆம் உட்பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட பகிரங்க

உருவகங்களின் நிதிசாரா சொத்துக்களின் முகாமைத்துவம் ஏதேனும் இயைபான எழுத்திலான சட்டத்துக்கமைய ஆளப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அசையும் அல்லது அசையாத ஆதனம் என்பவற்றின் விற்பனைக்கான வரும்படிகள் அல்லது வரவுசெலவுத்திட்ட உருவகத்துக்கு சொந்தமான ஏதேனும் பிரத்தியேக சிறப்புரிமை என்பன திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் கையாளப்படுதலும் வேண்டும்.

## பாகம் VIII

### நியதிச்சட்ட நிதியங்கள்

*நியதிச்சட்ட நிதியங்கள் மீதான திறைசேரிச் செயலாளருக்கான தத்துவங்கள்*

**39.** (1) திறைசேரிக்கான செயலாளர் எல்லா நிதியச் சட்ட நிதியங்களையும் மேற்பார்வை செய்தல், பரிசோதித்தல் மற்றும் கண்காணித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கருமங்களுக்கு வேறு ஏதேனும் எழுத்திலான சட்டங்கள் ஏற்பாடு செய்யப்படாதவை தொடர்பில் நியதிச்சட்ட நிதியங்கள் பற்றி பணிப்புரைகளையும் வழங்கலாம்.

(2) திறைசேரிக்கான செயலாளர் ஒவ்வொராண்டிலும் ஆகக்குறைந்தது ஒரு தடவை அமைச்சரவைக்கான நியதிச்சட்ட நிதியங்களின் நிறைவேற்றுகை பற்றிய அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) ஒவ்வொரு நிதிசட்ட நிதியமானது -

(அ) இச்சட்டத்தின்கீழ் மற்றும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதில் திறைசேரிக்கான செயலாளரினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரையுடன் இசைந்தொழுகுதல் வேண்டும் ;

(ஆ) (i) நியதிச்சட்ட நிதியத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலரினால் மற்றும் அங்கீகாரத்துக்காக திறைசேரிக்கான செயலாளருக்கான இயைபான அமைச்சரினால் புறக்குறிப்பிடப்பட்ட வருடாந்த வரவுசெலவுத்திட்ட வரைவு மதிப்பீடுகள் சமர்ப்பித்தல் வேண்டும் ;

(ii) ஏதேனும் நியதிச்சட்ட நிதியம் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தினால் நிதியளிக்கப்பட்டிருப்பின், திறைசேரிக்கான செயலாளரினால் வழங்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட அழைப்புச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கிசைவாக அவர்களுடைய வரவு செலவுத்திட்ட உத்தேசங்களைத் தயாரித்தல் வேண்டும் ;

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான திறைசேரிக்கான செயலாளருக்கு அதன் நிறைவேற்றுகை பற்றிய கிரமமான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) திறைசேரிக்கான செயலாளரினால் எழுத்துமூலம் தேவைப்படக்கூடியவாறான ஏனைய தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) ஏதேனும் நியதிச்சட்டமற்ற நிதியம் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியில் இருந்து அதன் தொழிற்பாடுகளை இல்லா தொழித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தேதியிலிருந்து ஓராண்டினுள் கலைக்கப்படுதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய நிதியத்துக்கு வரவு வைக்கப்பட்ட பணங்கள் அத்தகைய நிதியத்தின் பொறுப்புடைமைகள் புரியப்பட்ட பின்னர் திரட்டுநிதியத்துக்கு அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், திறைசேரிக்கான செயலாளருட னான கலந்தாலோசனையின் பேரில் நிதியமைச்சர் அத்தகைய நியதிச்சட்டமற்ற நிதியம் தொடர்ந்து நடைமுறையிலிருத்தல் வேண்டுமென தீர்மானிக்கின்றவிடத்து, அத்தகைய நிதியம் விதித்துரைக்கப்பட்டக்கூடியவாறாக நியதிச்சட்ட நிதியமொன்றுக்கு மாற்றப்படுதலும் வேண்டும்.

## பாகம் IX

## பகிரங்க முதலீட்டு முகாமைத்துவம்

*பகிரங்க முதலீட்டு முகாமைத்துவம் மற்றும் பகிரங்க முதலீட்டு குழு என்பவற்றின் பொதுவான கோட்பாடுகள்*

**40.** (1) பகிரங்க தனியார் பங்காண்மை கருத்திட்டமொன்று உள்ளடங்கலான பகிரங்க முதலீட்டு கருத்திட்டத்தின் தெரிவு மற்றும் நடைமுறைப்படுத்துதல் என்பன பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகப்படுதல் வேண்டும் :-

(அ) பிரிவு 2 இல் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள்;

(ஆ) பாகம் III இல் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி பொறுப்பு கட்டமைப்பு; அத்துடன்

(இ) இலங்கையினுடைய தேசிய அபிவிருத்தி கொள்கைக் கட்டமைப்புகள், தேசிய கொள்கைகள், துறைசார்ந்த திட்டங்கள் மற்றும் பகிரங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்.

(2) நிதி அமைச்சர் பின்வருவோரைக் கொண்டுள்ள பகிரங்க முதலீட்டுக் குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும் :-

(அ) பின்வரும் விடயத்துறைகளுக்கு பொறுப்பாகவுள்ள பொதுத் திறைசேரியிலுள்ள திணைக்களத் தலைவர்கள் :-

(i) தேசிய திட்டமிடல்;

(ii) பகிரங்க நிதி;

(iii) நிதிக்கொள்கை;

(iv) தேசிய வரவுசெலவுத்திட்டம்;

(v) பகிரங்க தனிசு முகாமைத்துவம்;

(vi) வெளியக மூலங்கள்;

(vii) *திறைசேரித் தொழிற்பாடுகள்;*

(viii) *பகிரங்க தொழில்முயற்சிகள்;*

(ix) *முகாமைத்துவ சேவைகள்;*

(x) *கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண் காணிப்பு; அத்துடன்*

*(ஆ) பகிரங்க – தனியார் பங்காண்மை எனும் விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள அதிகாரி.*

*(3) பகிரங்க முதலீட்டுக்குழுவின் தவிசாளர் திறைசேரிக்கான செயலாளராக இருத்தல் வேண்டும்.*

*(4) பகிரங்க முதலீட்டுக் குழுவுக்கான செயலாளர் திறைசேரிக் கான செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தேசிய திட்டமிடல் எனும் விடயத்துக்கு பொறுப்பான திணைக்களத்தின் அலுவலரொருவராக இருத்தல் வேண்டும்.*

*(5) பகிரங்க முதலீட்டுக்குழுவானது பின்வருவனவற்றுக்கு பொறுப்பானதாதல் வேண்டும்-*

*(அ) நிதி அமைச்சரின் அமைச்சினால் வெளியிடப்படும் கட்டளைக்கற்களின் அடிப்படையின் மீது பிரிவு 42 இல் குறித்துரைக்கப்பட்ட பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டங்கள் உட்பட பகிரங்க முதலீட்டுக் கருத் திட்டங்களை தெரிவு செய்தல்;*

*(ஆ) வருடாந்த வரவுசெலவுத் திட்டத்திலிருந்து நிதியளிப்பு உட்பட அத்தகைய கருத்திட்டங்களுக்கான நிதியளிப்பு முறைபற்றி நிதியமைச்சருக்கு விதந்துரைகளைச் செய்தல்; அத்துடன்*

*(இ) பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டங்கள் உட்பட பகிரங்க முதலீட்டு கருத்திட்டங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பவற்றை நடைமுறைப்படுத்தலை*

மேற்பார்வைசெய்தல் மற்றும் நிதியமைச்சருக்கு அவசிய மென கருதப்படக்கூடியவாறான விதந்துரைகளை செய்தல்.

*பகிரங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்*

**41.** (1) தேசிய அபிவிருத்தி கொள்கை கட்டமைப்பின் அடிப்படையின் மீது திட்டமிடப்பட்ட பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டங்கள் உட்பட எல்லா நடந்துகொண்டிருக்கும் மற்றும் எதிர்கால பகிரங்க முதலீட்டு கருத்திட்டங்களை கொண்டுள்ள பகிரங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டமொன்று இருத்தல் வேண்டும். பகிரங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் நிதியமைச்சரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான மற்றும் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான முறையில் தேசிய திட்டமிடல் எனும் விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள திணைக்களத்தினால் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் நிதியமைச்சரின் அமைச்சின் உத்தியோகபூர்வ ரீதியிலான வலைத்தளத்தில் வெளியிடப்படுதலும் வேண்டும். அத்துடன் ஆண்டுதோறும் இற்றைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(2) ஏதேனுமாண்டில் மே மாதத்தின் பதினைந்தாம் நாளன்று பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக புதிய பகிரங்க முதலீட்டுக் கருத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்கு உட்கருதுகின்ற ஒவ்வொரு வரவு செலவுத்திட்ட உருவகமும் தேசிய திட்டமிடல் எனும் விடயத்துக்குப் பொறுப் பாகவுள்ள திணைக்களத்துக்கான விதித்துரைக்கப்பட்ட விபரங்கள் உள்ளடங்கலாக கருத்திட்ட உத்தேசமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) திணைக்களம் பின்வருவனவற்றுக்காக தேசிய திட்டமிடல் எனும் விடயத்துக்கு பொறுப்பானதாதல் வேண்டும்-

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான மதிப்பீட்டு முறைமையியல்களுக்கிணங்க வரவுசெலவுத் திட்ட உருவகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்சாத்திய தன்மை மற்றும் சாத்திய தன்மை பற்றிய கற்கை அறிக்கைகள் உள்ளடங்கலாக கருத்திட்ட பிரேரணை களை மீளாய்வு செய்தல்;

(ஆ) கருத்திட்ட பிரேரணை பற்றிய மதிப்பீட்டின் அடிப்படையின் மீதானதும் மற்றும் நடுத்தர கால நிதிக் கட்டமைப்பு உள்ளடங்கலாக இலங்கை தேசிய அபிவிருத்தி திட்டம் மற்றும் நிதி செயல்நுணுக்க கூற்று என்பவற்றுடன் ஒத்திசைவதற்கு அமைவானதுமான பகிரங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்கப் பட வேண்டியதுமான கருத்திட்ட பிரேரணைகளை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது நிராகரித்தல்.

கருத்திட்ட தெரிவு மற்றும் வரவு செலவுத் திட்டமிடல்

**42.** (1) ஒவ்வொரு வரவுசெலவுத்திட்ட உருவகமும் 41 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பகிரங்க முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்திலும் அத்தகைய பிரேரிக்கப்பட்ட கருத்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பின், வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்குவதற்காக பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டம் உள்ளடங்களாக, பகிரங்க முதலீட்டுக் கருத்திட்டத்தை நிதியமைச்சருக்குப் பிரேரிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டமொன்று உள்ளடங்கலாக ஏதேனும் பகிரங்க முதலீட்டுக் கருத்திட்டப் பிரேரணை திறைசேரிக்கான செயலாளரினால் வழங்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட அமைப்பு சுற்றறிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் வரவுசெலவுத் திட்ட உருவகத்தின் வரவுசெலவுத் திட்டப் பிரேரணையில் உள்ளக்கப்படுதல் வேண்டும்.

(3) வரவுசெலவுத்திட்ட அழைப்பு சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ள உச்சவரம்புகளுக்கமைய, பகிரங்க முதலீட்டுக் குழு-

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான கருத்திட்ட தெரிவுக் கட்டளைக்கற்களுக்கிணங்க பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக பிரேரிக்கப்பட்ட பகிரங்க முதலீட்டுக் கருத்திட்டங்களை மீளாய்வு செய்தல் வேண்டுமென்பதுடன் நிதி அமைச்சரின் அங்கீகாரத்துக்காகவும் அமைச்சரவை யினால் அங்கீகாரத்துக்காக வருடாந்த வரவுசெலவுத் திட்ட வரைவில் உள்ளடக்குவதற்காகவும் முன்னுரிமை யளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியலைத் தயாரித்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) கருத்திலெடுக்க தேவையானதான கிடைக்கப்பெறக் கூடிய நிதி இடைவெளி மற்றும் ஏனைய இயைபான

கருமங்களை கணக்கிலெடுத்து தோதான நிதியளிப்பு மூலங்களை விதந்துரைத்தல் வேண்டும்.

(4) நிதி அமைச்சர் பகிரங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படாத பகிரங்கத தனியார் பங்காண்மைக் கருத்திட்டம் உள்ளடங்கலாக பகிரங்க முதலீட்டுக் கருத்திட்டமொன்றுக்கு ஏதேனும் ஒதுக்கீடு வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தினூடாகச் செய்யப்படுதலாகாதென்பதனை உறுதிசெய்தல் வேண்டும்.

(5) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தினால் வெளிப்படுத்தப்பட்ட இயற்கை அனர்த்தங்கள் அல்லது அவசரகால நிலைமைகளுக்கு பதிலிறுக்கும் வகையில் குறிப்பாக அபிவிருத்தி செய்யப்பட்ட பகிரங்க முதலீட்டு கருத்திட்டங்கள் பகிரங்க முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்துக்கு வெளியே கவனத்திலெடுக்கப்படலாம். அத்தகைய பகிரங்க முதலீட்டு கருத்திட்டங்கள் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான முறையில் கட்டளைக்கற்கள் மற்றும் நடவடிக்கை முறைகளுக்கமைந்ததாதல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பகிரங்க முதலீட்டு கருத்திட்டங்கள் பின்வருவனவற்றுக்கானதாகவிருத்தல் வேண்டும்:-

(அ) எவையேனும் ஏற்புடமையான எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைந்தவை; அத்துடன்

(ஆ) அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவை.

பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டங்கள்

**43.** (1) பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டங்கள் இச்சட்டத்தின்கீழ் பகிரங்க முதலீட்டு கருத்திட்டங்கள் தொடர்பில் பின்பற்றப்படும் அதே நடவடிக்கைமுறைக்கமைந்ததாதல் வேண்டும். பகிரங்க தனியார் பங்காண்மை கருத்திட்டங்களுக்கு ஏற்புடமையாகும் மேலதிக ஏற்பாடுகள் விதித்துரைக்கப்படக்கூடிய வாறானதாகவிருத்தல் வேண்டும். நிதி அமைச்சர் பின்வருமாறு இருப்பின் மட்டும், வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் பகிரங்க தனியார் பங்காண்மை கருத்திட்டமொன்றை உள்ளடக்கலாம்.

(அ) அத்தகைய கருத்திட்டம் விதித்துரைக்கப்பட்ட பொருளாதார, சமூக மற்றும் சூழல் கட்டளைக்கற்கள் பற்றிய நியதிகளின்படி பொருளாதார திரும்பலொன்றை முனைகின்ற கருத்திட்டமொன்றாக கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) இடைக்கால நிதி கட்டமைப்பின்கீழ் உச்சவரம்புகளை விஞ்சாத பகிரங்க தனியார் பங்காண்மைகள் மீதான அரசாங்கத்தினால் வழங்கப்பட்டவாறான எவையேனும் உத்தரவாதங்கள்; அத்துடன்

(இ) பகிரங்க தனியார் பங்காண்மை கருத்திட்டமொன்றில் அரசாங்கத்தினால் பொறுப்பிக்கப்பட்ட இடர் நியாயமான மற்றும் நிதிசார்பில் வசதியளிப்பதாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் பிரேரிக்கப்பட்ட இடர் தணிப்பு செயல்நுணுக்கங்கள் போதுமானதாக கருதப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய இடரினை பொறுப்பெடுத்தல் கருத்திட்ட செயற்திறன் மிக்க நடைமுறைக்கு தேவைப்படுத்தப்பட்டதுமாகும்.

(2) பகிரங்க தனியார் பங்காண்மை கருத்திட்டங்கள் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கத்துக்காக நிதி அமைச்சரின் அங்கீகாரத்துக்காக 42 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட முன்னுரிமையளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியலில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(3) அங்கீகரிக்கப்பட்ட பகிரங்க தனியார் பங்காண்மை கருத்திட்டமொன்றின் மீது திரட்டு நிதியத்திலிருந்தான ஏதேனும் செலவினம் இயைபான நிதியாண்டுக்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் வாழ்க்கை முழுவதும் பகிரங்க தனியார் பங்காண்மை கருத்திட்டம் பற்றிய மொத்த ஆகுசெலவுகள் வருடாந்த வரவு செலவுத்திட்ட ஆவணத்தில் வெளிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) பகிரங்க தனியார் பங்காண்மை கருத்திட்டத்துக்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மேல், நிதியமைச்சரின் அமைச்சு பின்வருவனவற்றை உறுதிசெய்தல் வேண்டும் :-

(அ) எல்லா பகிரங்க தனியார் பங்காண்மை கருத்திட்டங்களுடன் இணைந்த எதிர்பாராத பொறுப்புகள் பற்றிய மதிப்பீடு நிதி செயல்நுணுக்க கூற்றில் உள்ளடக்கப் பட்டுள்ளமை; அத்துடன்

(ஆ) பகிரங்க தனியார் பங்காண்மை கருத்திட்டங்கள் மற்றும் அவர்களுடைய நிதிசார் தாக்கம் என்பவற்றின் நிறைவேற்றுகை பற்றிய அறிக்கைகள் நிதி அமைச்சரின் அமைச்சின் வருடாந்த அறிக்கையுடன் பாராளுமன்றத் துக்கு சமர்ப்பிக்கப்படுகின்றமை.

*கருத்திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு*

**44.** (1) ஒவ்வொரு பகிரங்க உருவகம் வரவுசெலவுத்திட்ட குறித்தொதுக்கத்தினுள் மற்றும் திறைசேரிக்கான செயலாளரினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கிணங்க உரிய நேரத்தினுள் பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டங்கள் ஒப்படைக்கப்படுதல் வேண்டும் என்பது உள்ளடங்கலாக எல்லா பகிரங்க முதலீட்டுக் கருத்திட்டங்களையும் உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

(2) அங்கீகரிக்கப்பட்ட பகிரங்க முதலீட்டு கருத்திட்டங்கள் பற்றிய நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றுக்குப் பொறுப்பான ஒவ்வொரு பிரதான கணக்கீட்டு அலுவலர் அல்லது கணக்கீட்டு அலுவலர் வருடாந்த செயல் திட்டத்தை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் நிதி அமைச்சரின் அமைச்சினால் மாதாந்தம் கண்காணிக்கப்படுவதற்கு அத்தகைய ஒவ்வொரு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மீது தகவல்களை வழங்குதலும் வேண்டும்.

(3) இயைபான பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலரினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையின்மீது பகிரங்க முதலீட்டுக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் துரிதமான செயல்நுணுக்க முடிபுகளை எடுப்பதற்கு திட்டமிடல், வள பகிர்வு செய்தல், வரவு செலவு திட்டமிடல், நிதியளிப்பு மற்றும் கண்காணித்தல் என்பவற்றுக்கு பொறுப்பான உருவகங்களின் தலைவர்களிலிருந்து பதினொன்றுக்கு மேற்படாத உறுப்பினர்களை உள்ளடக்கிய அமைச்சரவையினால் நியமிக்கப்படும் குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(4) கருத்திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக்கு பொறுப்பான திணைக்களத் தலைவர் குழுவுக்கான செயலாளராகவிருத்தல் வேண்டும்.

(5) குழுவின் பணிகள் மற்றும் பொறுப்புடமைகள் மற்றும் கருத்திட்டத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு பற்றிய முறை என்பன விதித்துரைக்கப்படக்கூடியவறாகவிருத்தல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டம் பற்றிய நிலைபெறுதகுதன்மை மற்றும் வசதிப்படுத்தலைப் பாதிக்கின்ற ஒப்பந்தங்கள் அல்லது உடன்படிக்கைகளுக்கான எவையேனும் கணிசமான மாற்றங்கள் நிதி அமைச்சரினால் முற்கூட்டியே அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். நிதி அமைச்சர் இயைபான எழுத்திலான சட்டங்கள் அல்லது வழிகாட்டுநெறிகள் என்பவற்றை கணக்கிலெடுத்து நிலையானதான ஒப்பந்தமொன்றில் அல்லது உடன்படிக்கை யொன்றில் ஏதேனும் மாற்றத்தை தீர்மானிப்பதற்கான கட்டளைக் கற்களை தீர்மானிக்கலாம்.

**45.** (1) பகிரங்க முதலீட்டு குழுவினால் அங்க்கீரிக்கப்பட்ட எல்லா புதிய கருத்திட்டங்கள் மற்றும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் பகிரங்க முதலீட்டு கருத்திட்டங்கள் தொடர்பில் தகவலுடன் சேர்த்து அறிக்கையொன்று பகிரங்க தனியார் பங்காண்மை கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக வருடாந்த வரவுசெலவுத் திட்ட ஆவணத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். அத்தகைய அறிக்கை பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும் :- அறிக்கையிடல்

(அ) ஒவ்வொரு கருத்திட்டத்தின் பெயர், ஆரம்பிக்கும் தேதி அல்லது தேதிகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாகும் தேதி அல்லது தேதிகள், குறிக்கோள்கள் பற்றிய சுருக்கமொன்று மற்றும் கருத்திட்டத்தின் பரப்பெல்லை;

(ஆ) கருத்திட்டம் பற்றி ஏற்கனவே உறப்பட்ட செலவினம் உள்ளடங்கலாக மொத்த கருத்திட்ட ஆகுசெலவு,

இடைக்கால மற்றும் நிதியளிப்பு மூலங்களின் மேலான வருடாந்த செலவினம் பற்றிய மதிப்பீடொன்று; அத்துடன்

(இ) நிதி அமைச்சரினால் தோதாகக் கருதக்கூடியவாறான வேறு ஏதேனும் தகவல்.

(2) திறைசேரிக்கான செயலாளர் பகிரங்க தனியார் பங்காண்மை கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக பகிரங்க முதலீட்டுக் கருத்திட்டங்கள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தரவு வைப்பகமொன்றைப் பேணுவதற்கு பொறுப்பானவராதல் வேண்டும்.

### பாகம் X

### அரசாங்கம் கடன் பெறுதல் மற்றும் உத்தரவாதங்கள்

பகிரங்க பொது முகாமைத்துவம்

**46.** பகிரங்க தனிசு மற்றும் அரசாங்க உத்தரவாதங்கள் பற்றிய முகாமைத்துவம் மீதான கொள்கை கட்டமைப்பு இச்சட்டத்தின் பாகம் III இன் ஏற்பாடுகளுக்கிணங்க மற்றும் இயைபான சட்டங்களுக்கமைவாக இருத்தல் வேண்டும்.

### பாகம் XI

### கணக்கிடுதல் மற்றும் அறிக்கையிடுதல்

நிதி அறிக்கையிடுதல்

**47.** (1) அரசாங்கத்தின் நிதிக் கூற்று பின்வருவனவற்றுக்காதல் வேண்டும் -

(அ) சர்வதேச பகிரங்க துறை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையின்மீது அபிவிருத்தி செய்யப்படுவதற்கு நியமங்களுடன் ஒத்திசைவதற்கு தயாராகவிருத்தல்;

(ஆ) கணக்கீட்டு நியமங்கள் ஏற்புடமையாகும் பகிரங்க உருவகங்களின் நிதிசார் தகவலை பொது மக்களுக்கு வெளிப்படுத்துவதில் தெளிவானதன்மையை மேம்படுத்துதல் மற்றும் அரசிறை, செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வினைத் திறனான முகாமைத்துவத்தினை மேம்படுத்துதல்; அத்துடன்

(இ) பகிரங்க துறையில் நிதிசார் அறிக்கையிடல் பற்றிய முன்னேற்றத்தினை திட்டமிடுதல்.

(2) வரவு செலவுத்திட்ட உருவகங்கள் இயைபான எழுத்திலான சட்டங்களில் குறித்துரைக்கப்பட்டதான வருடாந்த நிதிசார் கூற்று மற்றும் முறையில் மற்றும் நிகழ்மை மற்றும் விபரங்களில் தகவலை கணக்காய்வாளர் தலைமைதிபதிக்கு தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) கணக்குகள் பற்றிய ஒன்றிணைந்த விளக்க அட்டவணை திறைசேரிக்கான செயலாளர் நிதி அமைச்சரின் ஒருபாட்டுடன் அத்தகைய தேவைப்பாட்டிலிருந்து குறித்த வரசெலவுத்திட்ட உருவகமொன்றை விலக்களித்தாலொழிய, ஒவ்வொரு வரவு செலவுத்திட்ட உருவகத்தினாலும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், ஒவ்வொரு வரவுசெலவுத்திட்ட உருவகத்தின் கணக்குகள் எல்லா அவசியமான தகவல்களைப் பிரதிபலித்தல் வேண்டும்.

(4) ஒவ்வொரு நிதியாண்டின் முடிவின் பின்னரான நூற்றி யெண்பது நாட்களுக்குப் பிந்தாமல் -

(அ) மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் மேவப்பட்ட ஒவ்வொரு பகிரங்க உருவகமும் வருடாந்த செயல்நிறைவேற்ற அறிக்கையொன்றை வெளியிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) மூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் மற்றும் (iii) ஆம் உட்பந்திகளில் மேவப்பட்ட ஒவ்வொரு பகிரங்க உருவகமும் வருடாந்த அறிக்கையொன்றை வெளியிடுதல் வேண்டுமென்பதுடன்,

அவை இயைபான எழுத்திலான சட்டங்கள் மற்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு மற்றவற்றுக்கிடையில் கணக்குகள் மற்றும் ஏனைய நிதிசார் கூற்றுக்களை உள்ளடக்குதல் வேண்டும்.

(5) திறைசேரிக்கான செயலாளர் கணக்கீடுசெய்தல் மற்றும் அறிக்கையிடுதலுக்காக காலத்துக்குக்காலம் அறிவுறுத்தல்கள், பணிப்புரைகள், செய்முறைகள், நடவடிக்கைகள் மற்றும் முறைமைகளை வழங்குதல், வெளியிடுதல் மற்றும் மீளாய்வு செய்தல் வேண்டும்.

(6) இச்சட்டத்தில் வேறுவகையில் குறிப்பிட்டாலொழிய, கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கான வரவுசெலவுத்திட்ட உருவகங்கள் பற்றிய கணக்குகள் மற்றும் நிதிக்கூற்றுகள் என்பவற்றின் சமர்ப்பணம் மற்றும் ஏனைய வரவுசெலவுத்திட்ட உருகங்கள் பற்றிய ஏனைய நிதிசார் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக் கிணங்கவிருத்தல் வேண்டும்.

தகவல்களை தேவைப்படுத்து வதற்கான தத்துவம்

**48.** (1) திறைசேரிக்கான செயலாளர் பின்வரும் அடிப்படையின் மீது கிரமமான அறிக்கைகள் அல்லது வேறு ஏதேனும் தகவல்களை கொடுத்துதவுவதற்கு 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i), (ii) மற்றும் (iii) எனும் உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட பொது உருவகங்களை தேவைப்படுத்து வதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) இப்பாகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட கூற்றுக்கள் மற்றும் அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு அவசியமானவறான மற்றும் அவருடைய பணிகளைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான; அத்துடன்

(ஆ) அவர்களுடைய நிதிசார் முகாமைத்துவம் தொடர்பி லான கருமங்கள்.

(2) ஒவ்வொரு பகிரங்க உருவகத்தின் தலைவர் நேர அமைப்பி னுள் மற்றும் திறைசேரிக்கான செயலாளரினால் குறித்துரைக்கப் பட்ட படிவத்தில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் திறைசேரிக்கான செயலாளரினால் கொடுத்துதவப்படுவதற்கு தேவைப்பட்ட தகவல்கள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றை கொடுத்துதவுதல் வேண்டும்.

வரவு செலவுத் திட்ட பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை

**49.** (1) ஒவ்வொரு ஆண்டிலும் பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்காக தீர்மானிக்கப்பட்ட திகதியன்று நிதி அமைச்சரினால் வரவு செலவுத் திட்ட பொருளாதார மற்றும் நிதி அறிக்கையொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) நடப்பிலுள்ள மற்றும் உடன் அடுத்துறும் நிதியாண்டு தொடர்பில் விதிக்கப்படக்கூடியவாறான படிவத்தில் பின்வரும் தகவல்களை உள்ளடக்கி வரவு செலவுத் திட்ட பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கையொன்று இருத்தல் வேண்டும்: -

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புடைய மதிப்பீடுகள்;

(ஆ) பாவனையாளர் விலைகளுடன் தொடர்புடைய மதிப்பீடுகள்;

(இ) தொழில் மற்றும் தொழில் வாய்ப்பின்மை ஆகிய வற்றுடன் தொடர்புடைய மதிப்பீடுகள்;

(ஈ) மீதிக் கொடுப்பனவுகள் பற்றிய நடைமுறைக் கணக்கு நிலை தொடர்பிலான மதிப்பீடுகள்;

(உ) அரசிறை மற்றும் செலவினம் தொடர்பிலான மதிப்பீடு கள்;

(ஊ) அரசாங்க கடன் பெறுதலுடன் தொடர்புடைய மதிப்பீடு கள்;

(எ) (அ) முதல் (ஊ) வரையிலான பந்திகளில் குறித் துரைக்கப்பட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதில் பயன் படுத்தப்பட்டுள்ளதான அடிப்படை, பொருளாதார அல்லது வேறு வகை;

(ஏ) (அ) முதல் (ஊ) வரையிலான பந்திகளில் குறித் துரைக்கப்பட்ட மதிப்பீடுகளின் கூருணர்வுடன் தொடர்புடைய கூற்றொன்று மற்றும் அத்தகைய மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட பொருளாதார அல்லது ஏனைய அடிப்படைகளுடன் சம்பந்தப்பட்ட நிகழக்கூடிய மாற்றங்கள்;

(ஐ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அரசாங்கத் தினால் அளிக்கப்பட்ட உத்தரவாதங்கள் மற்றும் நட்டோத்தரவாதங்கள் உள்ளடங்கலாக, அத்தகைய எதிர்பாரா செலவுப் பொறுப்புகள் போன்ற நிதி நிலையில் பொருள் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இடர்கள், நடைமுறை சாத்தியமுள்ளதாக அளவிடப்பட்ட கூற்றொன்று;

(ஒ) (உ) எனும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட மதிப்பீடு களில் உள்ளடக்கப்படாத அரசாங்க செலவுகளுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் உத்தேசங்களுடன் தொடர்புடைய பொது அறிவித்தல்கள்;

(ஓ) மூல கூற்று வெளியிடப்பட்டதிலிருந்து நிதி செயல் நுணுக்க கூற்று மற்றும் நடுத்தர கால நிதிக் கட்டமைப்பு ஆகியவற்றில் இற்றைப்படுத்தப்பட்டு இறுதிப் படுத்தப்படாத அரசாங்கத்தின் தற்போது நடைபெறு கின்ற பேச்சுவார்த்தைகள்; அத்துடன்

(ஔ) அத்தகைய ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் அரசாங்கத்தின் நிதி நிலையை நேர்மையாக பிரதி பலிப்பதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய ஏனைய தகவல்கள்.

(3) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, வரவு செலவுத் திட்ட பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் இயலுமானவரை, அரசாங்கத்தின் நிதி மற்றும் பொருளாதார நிலையின்மீது பொருள் ரீதியான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய எல்லா அரசாங்க முடிபுகள் மற்றும் ஏனைய எல்லா சூழ்நிலைகள் என்பவற்றைக் கவனத்துட் கொள்ளுதல் வேண்டும்.

(4) (அ) தேசிய பந்தோபஸ்துக்கு பங்கமேற்படுத்தக்கூடிய; அல்லது

(ஆ) பேச்சுவார்த்தைகளில், வழக்காடல்களில் அல்லது வர்த்தக செயற்பாடுகளில், பொருள் சார்ந்த முறையில் இலங்கையை இணக்கம் செய்யக்கூடிய,

வரவு செலவுத் திட்ட பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கையில் உள்ளடக்கப்படுவதற்கு தேவைப்படுகின்றதான இப்பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள எதுவும் சேர்த்து வாசிக்கப்பட்டு பொருள் கொள்ளப்படுதலாகாது. அத்துடன் நிதியமைச்சரின் எழுத்து மூல அபிப்பிராயத்தின் படி அத்தகைய விபரங்கள் அல்லது தகவல்கள் என்பவற்றை வெளியிடுதலுமாகாது.

(5) அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டதன்மேல், நிதி அமைச்சரின் அமைச்சின் அலுவலக இணையத்தளத்தில் அறிக்கை வெளியிடப்படுதலும் வேண்டும்.

மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை

**50.** (1) நிதி அமைச்சர் அதன் கூற்றில் தரப்பட்டுள்ளதான அதன் நிதி செயல்நுணுக்கத்துக்கெதிரான அரசாங்கத்தினுடைய மத்திய ஆண்டு நிதி நிறைவேற்றுகையை மதிப்பீடு செய்வதற்கு பொதுமக்களுக்கு அடிப்படையொன்றை வழங்குவதற்காக மத்திய கால நிதி நிலைமை அறிக்கையொன்று ஒவ்வொரு ஆண்டு தொடர்பிலும் பொதுமக்களுக்கு வெளியிடப்படச் செய்வித்தல் வேண்டும்.

(2) நிதியாண்டு தொடர்பிலான மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கையானது பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) அவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான செலவினம் பற்றிய கூற்றொன்று;

(ஆ) அவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான அரசிறை பற்றிய கூற்றொன்று;

(இ) அவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான காசோட்டம் பற்றிய கூற்றொன்று;

(ஈ) அவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான கடன் பெறுதல் பற்றிய கூற்றொன்று;

(உ) அத்தகைய நிதியாண்டின் முதல் ஆறு மாதங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் நிதி நிலையை நியாயமாக வெளிப்படுத்துவதற்கு அவசியமாகவிருக்கக்கூடிய வாறான அத்தகைய வேறு கூற்றுகள்.

(3) மதிப்பிடப்பட்ட அரசிறை அல்லது காசோட்டம் ஆகியவற்றில் குறைபாடு அல்லது மதிப்பிடப்பட்ட செலவினம் அல்லது கடன் வாங்குதலில் மிகையொன்று காணப்படுமிடத்து, அத்தகைய குறைபாடுகளுக்கான அல்லது விஞ்சுதலுக்கான காரணங்களை மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடுதல் வேண்டும்.

(4) (5) ஐந்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மத்திய ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் இயலுமானவரை, அவ்வாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், எடுக்கப்பட்ட முடிபுகள் மற்றும் ஏலவேயுள்ள சூழ்நிலைகள் உள்ளடங்கலாக, நிதி நிலையின்மீது முக்கியமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய எல்லா அரசாங்க முடிபுகள் மற்றும் ஏனைய எல்லா சூழ்நிலைகள் என்பவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

(5) இப்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் பின்வரும் விபரங்கள் அல்லது தகவல் நிதி அமைச்சரின் எழுத்திலான அபிப்பிராயத்தின் நோக்கில் மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கையில் உள்ளீடு அல்லது ஏதேனும் தகவல் பற்றிய வெளிப்பாடு என்பவற்றை தேவைப் படுத்துகின்றதாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதலும் வேண் டும்–

(அ) தேசிய பந்தோபஸ்த்துக்கு பங்கமாகவுள்ள; அல்லது

(ஆ) பேச்சுவார்த்தை, வழக்காடல் அல்லது வர்த்தக செயற் பாட்டில் முக்கியமான வழியொன்றில் இலங்கையை இணக்குதல்.

(6) மத்திய ஆண்டு நிதி நிலைமை அறிக்கையில் உள்ளடக் கப்படுவதற்கு தேவைப்படும் ஏதேனும் கருமம் பற்றிய ஏதேனும் தகவல் இறுதியான வரவுசெலவுத்திட்ட பொருளாதார மற்றும் நிதி

நிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டதான அத்தகைய கருமம் தொடர்பிலான தகவலிலிருந்து மாற்றப்படாது இருக்குமிடத்து மத்திய கால நிதி நிலைமை அறிக்கை அத்தகைய தகவல் அவ்வாறு மாற்றமின்றியுள்ளது என குறிப்பிடுதல் வேண்டும்.

(7) மத்திய ஆண்டு நிதி நிலைமை அறிக்கை இயைபான ஆண்டின் ஒக்டோபர் மாதத்தின் இறுதி நாளன்று அல்லது இயைபான ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் நிறைவேற்றுகைத் தேதியிலிருந்து பத்து மாதங்கள் முடிவில் எது பின்னர் பிந்தாதோ நிதி அமைச்சரின் அமைச்சின் வலைத்தளத்தில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(8) நிதி அமைச்சர் –

(அ) மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை வெளியீட்டு தேதியன்று பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறின், அத்தகைய வெளியீட்டுத் தேதியின் இரண்டு கிழமையினுள் அத்தகைய அறிக்கையின் பிரதி ஒன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குச் செய்வித்தல் வேண்டும்; அல்லது

(ஆ) மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கையின் வெளியீட்டு தேதியன்று பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறா விடின், அடுத்த பாராளுமன்ற அமர்விலிருந்து இரண்டு கிழமைகளினுள் அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படுவதற்கு செய்வித்தல் வேண்டும்.

இறுதி வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கை

**51.** (1) நிதி அமைச்சர் ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும் பொதுமக்களுக்கு இபைபான நிதியாண்டுக்காக அதன் கூற்றில் தரப்பட்டுள்ளதான அதன் நிதி செயல்நுணுக்கத்துக்கெதிராக அரசாங்கத்தினுடைய வருடாந்த நிதி நிறைவேற்றுகையை மதிப்பீடுசெய்வதற்கு பொதுமக்களுக்கு அடிப்படையொன்றை வழங்குவதற்கு நிதி அமைச்சருக்கான அமைச்சரின் அமைச்சின் வருடாந்த அறிக்கையொன்றின் பாகமொன்றாக வெளியிடுவதற்குச் செய்வித்தல் வேண்டும்.

(2) நிதியாண்டு தொடர்பில் இறுதி வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கையானது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்–

(அ) அவ்வாண்டுக்கான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான செலவு பற்றிய கூற்றொன்று;

(ஆ) அவ்வாண்டுக்கான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மை யான அரசிறை பற்றிய கூற்றொன்று;

(இ) அவ்வாண்டுக்கான மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மை யான பணவோட்டம் பற்றிய கூற்றொன்று;

(ஈ) அவ்வாண்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான கடன் வாங்குதல் பற்றிய அறிக்கையொன்று; அத்துடன்

(உ) அத்தகைய நிதியாண்டின் முடிவில் அரசாங்கத்தின் நிதி நிலையை நேர்மையாக பிரதிபலிப்பதற்கு அவசிய மான அத்தகைய ஏனைய கூற்றுகள்.

(3) மதிப்பிடப்பட்ட அரசிறை அல்லது பணவோட்டத்தில் பற்றாக்குறைகள் காணப்படுமிடத்து அல்லது ஆரம்ப செலவின வரையறையிலிருந்து விலகலை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் மதிப்பீட்டு செலவின மிகையுள்ளவிடத்து அல்லது மதிப்பிடப்பட்ட கடன் வாங்கல் மிகையுள்ளவிடத்து, அத்தகைய பற்றாக்குறைகள் அல்லது மிகைக்கான காரணங்களை இறுதி வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கை குறிப்பிடுதல் வேண்டும்.

(4) இறுதி வரவுசெலவுத்திட்ட நிலை அறிக்கை நிதியாண்டின் முடிவிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல் நிதி அமைச்சரின் அமைச்சின் வலைத்தளத்தில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(5) நிதியமைச்சர் ஆனவர் -

(அ) இறுதி வரவுசெலவுத்திட்ட நிதி நிலை அறிக்கையின் வெளியீட்டுத் தேதியன்று பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறின், அத்தகைய வெளியீட்டுத் தேதியி லிருந்து இரண்டு கிழமைகளினுள் அத்தகைய அறிக்கையின் பிரதி ஒன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படுவதற்குச் செய்வித்தல் வேண்டும்; அல்லது

(ஆ) இறுதி வரவுசெலவுத்திட்ட நிலை அறிக்கையின் வெளியீட்டுத் தேதியன்று பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறாவிடின், அடுத்த பாராளுமன்ற அமர்விலிருந்து இரண்டு கிழமைகளினுள் அத்தகைய அறிக்கையின் பிரதி ஒன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்குச் செய்வித்தல் வேண்டும்.

(6) நிதியாண்டுக்கான இறுதி வரவுசெலவுத்திட்ட நிலை அறிக்கை அந்நிதியாண்டு தொடங்கியதன்பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டதான அந்நிதியாண்டு தொடர்பில் வரவுசெலவுத்திட்ட பொருளாதார மற்றும் நிதி நிலைமை அறிக்கையொன்று உள்ளடக்கலாம்.

தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கை

**52.** (1) திறைசேரிக்கான செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக பொதுத் தேர்தலை நடத்துவதற்காக தேவைப்படுத்துகின்ற பிரகடனம் அல்லது கட்டளையின் வெளியீட்டிலிருந்து மூன்று கிழமைகளினுள் நாட்டின் நிதி நிலை மீதான தகவல்களை உள்ளடக்கிய தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கையொன்றினை வெளியிடப்படுவதற்கு செய்வித்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கையானது தற்போதைய நிதியாண்டிற்கான பின்வரும் தகவல்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் -

(அ) அரசிறை மற்றும் செலவினம் பற்றிய மதிப்பீடுகள்;

(ஆ) அரசாங்க கடன் வாங்குதல்கள் பற்றிய மதிப்பீடுகள்;

(இ) அத்தகைய மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட பொருளாதார மற்றும் ஏனைய அனுமானங்கள்;

(ஈ) நிதி நிலையில் முக்கியமான தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய, நடைமுறை சாத்தியமுள்ளவிடத்து, அளவிடக்

கூடிய, இடர்கள் தொடர்பான கூற்றொன்று, அவையா வன -

(i) ஏதேனும் சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் மற்றும் நட்டோத்தரவாதங்கள் உள்ளடங்கலாக எதிர்பாரா செலவுப் பொறுப்புகள்;

(ii) (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட மதிப்பீடுகளில் உள்ளடக்கப்படாத அரசாங் கத்தினால் செய்யப்படும் செலவுகளை பகிரங்கமாக அறிவிக்கும் பிரேரணைகள் ; அத்துடன்

(iii) நடைபெற்றுக்கொண்டிருக்கும் மற்றும் இறுதி யாக்கப்படாத அரசாங்கப் பேச்சு வார்த்தைகள்; அத்துடன்

(உ) சொல்லப்பட்ட அறிக்கையின் தேதியிலுள்ளவாறான அரசாங்கத்தின் நிதிநிலை பற்றி நியாயமாக பிரதிபலிப் பதற்கு அவசியமாககூடியவாறான அத்தகைய ஏனைய தகவல்கள்.

(3) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கையிலுள்ள தகவல்கள் நிதி நிலையின் முக்கியமான விளைவைக்கொண்டுள்ள அரசாங்கத்தின் ஏதேனும் முடிபினால் இயலுமானவரை முழுமையான அளவுக்கு கணக்கிலெடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

(4) இப்பிரிவிலுள்ள எதுவும்-

(அ) தேசிய பந்தோபஸ்திற்கு பங்கமேற்படுத்தக்கூடிய; அல்லது

(ஆ) பேச்சுவார்த்தையில், வழக்காடலில் அல்லது வர்த்தக செயற்பாட்டில் முக்கியமான வழியில் இலங்கையை இணக்குகின்ற,

அத்தகைய விபரங்கள் அல்லது தகவல்கள் இருப்பின், நிதியமைச்சரின் எழுத்துமூலமான அபிப்பிராயத்தின்படி, தேர்தலுக்கு முன்னரான வரவுசெலவுத்திட்ட நிலை அறிக்கையை உள்ளடக்குதல் அல்லது ஏதேனும் தகவலை வெளிப்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்குவதனை தேவைப்படுத்துகின்றதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

(5) தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கையில் ஏதேனும் கருமம்பற்றிய தகவல்கள் உள்ளடக்கப் படுவதற்கு தேவைப்படுமிடத்து, அது முன்னரான வரவுசெலவுத் திட்ட பொருளாதார மற்றும் நிதிநிலைமை அறிக்கையில் அல்லது நடு ஆண்டு நிதி நிலை அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அக்கருமம் மீதான தகவலிலிருந்து மாற்றமின்றி இருத்தல் வேண்டும். தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கை இம் முன்னரான அறிக்கைகளில் ஒன்றில் அல்லது இரண்டிலும் உள்ளடக்கப்பட்ட தகவலிலிருந்து அத்தகைய தகவல் மாற்றமடையாமல் உள்ளது என குறிப்பிடுதல் வேண்டும்.

(6) ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கையில் பின்வருவன இணைக்கப்படுதல் வேண்டும் -

(அ) எட்டாம் உட்பிரிவின் தேவைப்பாடுகளுடன் நிதி அமைச்சர் இணங்கியொழுகுவதற்கான நோக்கத்துக்காக முழுமையான சாத்தியமுள்ளவரை நிதி அமைச்சரினால் கையொப்பமிடப்பட்ட கூற்றொன்று;

(ஆ) பின்வருவனவற்றை அறிக்கையிலுள்ள தகவல்களின் நோக்கத்துக்காக, திறைசேரிக்கான செயலாளரின் கூற்றொன்று –

(i) நிதி அமைச்சரின் அமைச்சின் அலுவலர்களினது சிறந்த தொழிலாண்மை தீர்ப்புகளை பிரதிபலித்தல்;

(ii) நிதி அமைச்சரின் அமைச்சில் காணப்படு கின்ற எல்லா பொருளாதார மற்றும் நிதி பற்றிய தகவல்களை கணக்கிலெடுத்தல் ; அத்துடன்

(iii) எட்டாம் உட்பிரிவின்கீழ் நிதி அமைச்சரினால் வெளிப்படுத்தப்பட்ட அரசாங்க முடிபுகள் மற்றும் சூழ்நிலைகள் பற்றிய நிதி தாக்கங்களை உள்ளடக்குதல்.

(7) நிதி அமைச்சர் புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெற்று இரண்டு கிழமைகளினுள் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அறிக்கையின் பிரதி ஒன்றினை பாராளுமன்றத்தின்முன்னர் சமர்ப்பிப்பதற்கு செய்வித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிக்கையானது நிதி அமைச்சரின் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடச் செய்வித்தலும் வேண்டும்.

(8) இப்பிரிவின் கீழ் தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கையை தயாரிப்பதற்கு திறைசேரியின் செயலாளரை இயலச்செய்கின்ற நோக்கத்துக்காக, பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான பொதுத் தேர்தலை நடாத்துவதற்கு தேவைப்படுத்துகின்ற பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்டு ஒரு கிழமையினுள் அரசாங்கத்தின் எல்லா முடிபுகள் மற்றும் ஏனைய சூழ்நிலைகள் பின்வரும் விபரங்களை திறைசேரிச் செயலாளருக்கு வெளிப்படுத்துதல் வேண்டும்.

இவை -

(அ) நிதியமைச்சர் அறிந்திருப்பதுடன்; அத்துடன்

(ஆ) பொருள் சார்ந்த நிதி அல்லது பொருளாதார ரீதியான தாக்கங்களை கொண்டதாக அல்லது உள்ளதாக இருக்கலாம்.

*நிதி அமைச்சின் அமைச்சரின் நிதி செயலாற்றுகை மீதான அறிக்கை*

**53.** (1) ஆகக்குறைந்தது காலாண்டு அடிப்படையில் நிதி அமைச்சர் அமைச்சரவைக்கு அரசாங்கத்தின் அரசிறை மற்றும் செலவினம் உள்ளடங்கலாக நிதிசார் நிறைவேற்றுகை பற்றிய கூற்றொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கூற்று விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் ஒவ்வொரு காலாண்டின் முடிவின் பின்னரும் நாற்பத்தைந்து நாட்களுக்குப் பிந்தாமல் நிதி அமைச்சரின் அமைச்சின் அலுவலக வலைத் தளத்தின்மீது ஒரே சமயத்தில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(2) திறைசேரிக்கான செயலாளர் அல்லது அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டம் என்பவற்றில் குறித்துரைக் கப்பட்டதான வருடாந்த அரசாங்க நிதிசார் கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு தயாரித்து சமர்ப்பித்தலும் வேண்டும்.

(3) திறைசேரிக்கான செயலாளர் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான படிவத்திலும் முறையிலும் நிதியாண்டின் முடிவின் பின்னர் நூற்றியெண்பது நாட்களுக்குப் பிந்தாமல் அதன்மீது அரசாங்கத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட கூற்றுகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்துடன் சேர்த்து அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் ஒட்டுமொத்த நிறைவேற்றுகையின்மீதான இறுதி வரவுசெலவுத் திட்ட நிலை அறிக்கை மற்றும் அத்தியாயம் என்பவற்றை உள்ளடக்கிய வருடாந்த அறிக்கையை தயாரித்தல் வேண்டும்.

(4) நிதி அமைச்சர் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆண்டறிக்கையை ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலிருந்து நூற்றியெண்பது நாட்களுக்குப் பிந்தாமல் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும். அறிக்கை நிதி அமைச்சரின் அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் வெளியிடப் படுதல் வேண்டும்.

*பதிவளித்தல் மற்றும் தளர்த்தீடுகள்*

**54.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன், இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகள் என்பவற்றுடன் இணங்கியொழுகாமையினால் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அலுவலர்களின் தாமதம், கவனயீனம், தவறு அல்லது மோசடி என்பவற்றினால் இழப்பு ஏற்படுமிடத்து, அத்தகைய இழப்பு பொறுப்பாகவுள்ள அலுவலர் அல்லது அலுவலர்களிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும்.

(2) இழப்புகளின் பதிவளிப்பதற்கான ஏதேனும் உரிமைக் கோரிக்கை இயைபான எழுத்திலான சட்டங்களுக்கமைய மற்றும் விதத்துரைக்கப்பட்ட இழப்பு மட்டங்கள் என்பவற்றை கருத்திற் கொண்டு திறைசேரியின் செயலாளரினால் கவனத்திலெடுக்கப் படுதல் வேண்டும்.

(3) தளர்த்தீடு என்பது அரசாங்கத்திற்கு வருமதியான பணத்தொகையை கைவிடுவது அல்லது இரத்துச் செய்வது ஆகும். தளர்த்தீடுகளானவை நட்டங்களிலிலிருந்து எழுகின்றவை தவிர, வேறு இரண்டு தனித்துவமான வகுதிகளுள் பின்வருமாறு உள்ளடங்குகின்றன:-

(அ) குறித்த சில நியதிச்சட்டங்கள் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களை அத்தகைய நியதிச் சட்டங்களின் நிருவாகத்திலுள்ள அரசாங்கத்துக்கு அரசிறை அல்லது ஏனைய வருமதிகள் பற்றிய இனங்களை தளர்த்தீடு செய்வதற்கு வலுவுக்களிக்கின்றது. அல்லது அதிகார மளிக்கப்பட்ட அலுவலர்கள் மேலதிக அதிகாரமின்றி அரசாங்கத்தின் வருமதிகளை இல்லாதாக்குதல் அல்லது தளர்த்தீடு செய்தல் என்பவற்றுடன் கையாள லாம்.

(ஆ) (i) நியதிச்சட்டத்தினால் அரசிறை சேகரிப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவிடத்து, ஆனால் உரிமைக் கோரிக்கை ஒன்றை தளர்த்துவதற்கோ அல்லது கைவிடுவதற்கோ அதன்கண் ஏற்பாடு எதுவும் ஏலவே இல்லை; அத்துடன்

(ii) அறவிடப்பட முடியாத அரசிறை தளர்த்தீடு அல்லது ஏனைய அரசாங்க வருமதிகள் இப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் மற்றும் இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளினுள் வராதவிடத்து, திறைசேரியின் செயலாளரது அதிகாரத்தை நாடுதல் வேண்டும்.

(4) செயல்கள், அதிகார மட்டுப்பாடுகள், நேர வரையறைகள் மற்றும் விசாரணை தொடர்பான வழிகாட்டிகள், அறிக்கையிடல், அறவிடுதல் மற்றும் இழப்பு அல்லது சேதம் பற்றி பதிவளித்தல் என்பன பற்றிய விபரங்கள் விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் வழங்கப்படுதல் வேண்டும்.

## பாகம் XII

### அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்

**55.** இப்பாகத்தின் ஏற்பாடுகள் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்டதான அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி களுக்கு ஏற்புடைமையாதல் வேண்டும். *இப்பாகத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை*

**56.** நிதி அமைச்சர் பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:- *அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் மீதான நிதி அமைச்சரின் அதிகாரம்*

(அ) அரசாங்கத்துக்கான ஆகுசெலவுகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தாபனமொன்றுடன் இணைந்த இடர்கள் உள்ளடங் கலாக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி ஒவ்வொன்றையும் தாபனம் செய்தல், மூடிவிடுதல் அல்லது இணைத்தல் என்பவற்றுக்கான உத்தேசங் கள் தொடர்பாக அமைச்சரவைக்கு அபிப்பிராய மொன்று வழங்குதல்;

(ஆ) அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் நிறைவேற்றுகையை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் கம்பெனி ஆளுகை வழிகாட்டுநெறிகளை வழங்குதல்;

(இ) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்மீது நிதிசார் மேற்பார்வையை பிரயோகித்தல்; அத்துடன்

(ஈ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் குறித்துரைக் கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் தத்துவத்தினைப் பிரயோகித்தல்.

**57.** (1) இயைபான அமைச்சர் 56 ஆம் பிரிவுக்கிணங்க அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியை தாபிப்பதற்கான ஏதேனும் பிரேரணை பின்வருமாறு சமர்ப்பித்தலாகாது- *அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகள் மீது இயைபான அமைச்சரின் அதிகாரம்*

(அ) அத்தகைய உருவகத்தின் தேவைப்பாடுகள் பற்றிய தெளிவான நியாயப்படுத்துகை இன்றி;

(ஆ) இயைபான அமைச்சரின் அமைச்சுப் பதவியின் நோக்கெல்லையின்கீழ் வராதவை;

(இ) இயைபான அமைச்சரின் அமைச்சு அல்லது வேறு ஏதேனும் அமைச்சின்கீழ் ஒத்த பணிகளுடன் வேறு ஏதேனும் அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சிகள் ஏலவேயிருப்பின்; அல்லது

(ஈ) அரசாங்கத்திற்கான ஆகுசெலவுகள் உள்ளடங்கலாக அத்தகைய தாபனம் அல்லது கூட்டிணைத்தலுடன் இணைந்த நீண்ட கால நன்மைகள் மற்றும் இடர்களை கவனத்துட்கொள்ளாமல்,

(2) இயைபான அமைச்சர் பின்வருவனவற்றை உறுதி செய்தல் வேண்டும் -

(அ) அறுபத்தோராம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்தல் உள்ளடங்கலாக நிதி அமைச்சரினால் தேவைப்படுத்தப்படும் தகவல்களை அவரது நோக்கெல்லையின் கீழ் வருகின்ற ஒவ்வொரு அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சியும் வழங்கு தலை ;

(ஆ) நிதி செயல்நுணுக்க கூற்றிற்கு ஏற்ப அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் வருடாந்த வரவு செலவுத் திட்டம் உள்ளமையை ; அத்துடன்

(இ) இடர் காரணிகள் மற்றும் அத்தகைய இடர்களை தணிப்பதற்கான செயல்நுணுக்கங்கள் அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகளினது வருடாந்த வரவு செலவுத் திட்டத்தினை பிரதிபலித்தலை ;

*அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்பில் திறைசேரியின் செயலாளரின் தத்துவங்கள் மற்றும் கடமைகள்*

**58.** (1) திறைசேரிக்கான செயலாளர் இயைபான எழுத்திலான சட்டங்களுக்கமைவாக, நிருவாகம், வரவு செலவுத் திட்டமிடல், பெறுகை, முதலீடு, நிதி மற்றும் அறிக்கையிடல் என்பன உள்ளடங்கலான பொறுப்புக்கூறுதலிலும் ஆளுகை தேவைப் பாடுகள் அவர்களுடைய நிதிசார் நிறைவேற்றுகையை மீளாய்வு செய்தல் மற்றும் ஏனைய வேறு கருமங்கள் என்பவற்றை மேவுகின்ற, அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான கொள்கை கருமங்கள் பற்றி அவர் அவசியமென கருதக்கூடியவாறான பணிப்புரைகளை வழங்கலாம்.

(2) திறைசேரிக்கான செயலாளர் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் உள்ள எல்லா பங்குடைமைகள் பற்றிய பதிவேடொன்றை வைத்திருத்தல் வேண்டும்.

*அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் வரவு செலவுத் திட்டம்*

**59.** (1) அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிதி ஆண்டு தொடர்பில் தமது வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வரவு செலவுத் திட்டம் வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய நிதியாண்டு தொடங்குவதற்கு முன்னரான பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் ஆளும் குழுவினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தினால் நிதியளிக்கப்பட்டிருப்பின், திறைசேரிக்கான செயலாளரினால் வழங்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட அழைப்பு சுற்றிக்கையின் ஏற்பாடுகளுடன் இணங்கி அவர்களுடைய வரவுசெலவுத்திட்டத்தைத் தயாரித்தல் வேண்டும்.

(3) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியொன்றின் ஆளும் குழு ஒவ்வொன்றும் அத்தகைய அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியின் வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டின் மூலதன செலவினம் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏற்புடைமையாகும் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

*அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளிலிருந்தான அறவிடு அல்லது பங்கிலாபங்கள்*

**60.** (1) (அ) ஏற்புடைமையாகுமிடத்து, திறைசேரிச் செயலாளருடனான கலந்தாலோசனையின்பேரில், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் உரிய ஆளும் குழுக்களினால் ஆக்கப்படும் பங்கிலாபக் கொள்கையொன்று இருத்தல் வேண்டும்.

(ஆ) நிதி அமைச்சர் ஏற்புடமையாகுமிடத்து, அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின்மீது அறவீடொன்றை விதிக்கலாமென்பதுடன் அத்தகைய அறவீட்டின் விதிப்பனவிலிருந்து அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியொன்றை விலக்களிக்கலாம். அத்தகைய அறவீடு 53 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆண்டறிக்கையில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(2) அரசாங்கத்துக்குச் செலுத்தப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்தான பங்கிலாபங்கள் அல்லது ஏனைய இலாப பகிர்வு என்பன திரட்டு நிதியத்துக்கு செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப்பட்ட வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தில் பிரதிபலிக்கப்படுதலும் வேண்டும்.

(3) திறைசேரிக்கான செயலாளர் 53 ஆம் பிரிவின் (3) உட்பிரிவின்கீழ் அறவீடாக அல்லது பங்கிலாபமாக சேகரிக்கப்பட்ட அத்தகைய தொகைகளை வருடாந்த அறிக்கையில் வெளிப் படுத்துதல் வேண்டும்.

(4) எதிரீட்டு வரி நிவாரணமெதுவும் இப்பிரிவின்கீழான அறவீடாக அல்லது பங்கிலாபமாக செலுத்தப்பட்ட தொகை தொடர்பில் அளிக்கப்படுதலாகாது.

அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் அறிக்கைகள்

**61.** (1) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி ஒவ்வொன்றும் பின்வருவனவற்றை தயாரித்து அதனை திறைசேரியின் செயலாள ருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் -

(அ) மத்திய கால செயல்நுணுக்க அல்லது கூட்டுறவுத் திட்டம்;

(ஆ) தமது மூலதன கருத்திட்டங்கள் மற்றும் பெறுகைத் திட்டம், பற்றிய தகவல்கள் உள்ளடங்கலாக வருடாந்த வரவுசெலவுத் திட்டம் மற்றும் வருடாந்த செயல்திட்டம் ஒன்று;

(இ) வருடாந்த அறிக்கையொன்று; அத்துடன்

(ஈ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் அறிக்கை.

(2) திறைசேரிக்கான செயலாளர் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைகளின் படிவங்கள், கால வரையறை மற்றும் பணிப்புகளை காலத்துக்குக் காலம் வெளியிடுதல் வேண்டும்.

(3) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியொன்று நிதி அமைச்சர் மற்றும் இயைபான அமைச்சுக்கான அத்தயை அறிக்கை களின் பிரதிநிதிகளுடன் சேர்த்து ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் விதித்துரைக்கபடக்கூடியவாறான கூற்றுக்கள் மற்றும்

*ஆவணங்களுடன் சேர்த்து, அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் பற்றிய அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் உள்ளடங்கலாக ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலிருந்தும் இரண்டு பஞ்சாங்க மாதங்களுக்குப் பிந்தாமல் வருடாந்த அறிக்கை வரைவொன்றை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(4) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயம் பெற்றுக் கொண்டதன்மேல் மற்றும் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவின் பின்னரான நூற்றியெண்பது நாட்களுக்குப் பிந்தாமல் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி இயைபான அமைச்சர் மற்றும் நிதி அமைச்சருக்கான அத்தகைய அறிக்கைகளின் பிரதிகளுடன் பாராளுமன்றத்துக்கு ஆண்டிறுதி அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் இயைபான அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சி பற்றி உத்தியோக பூர்வமான வலைத்தளத்தின் மீது அறிக்கையானது வெளியிடப் படுதலும் வேண்டும்.*

## பாகம் XIII

### *மாகாண சபைகள் மற்றும் உள்ளூரதிகார சபைகள்*

*வெளிப்படைத் தன்மை மற்றும் நிதிப் பொறுப்பு என்பவற்றின் கோட் பாடுகளை அவதானிப் பதற்கான கடமை*

***62.*** *(1) அரசியலமைப்பு மற்றும் இயைபான எழுத்திலான சட்டங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, மாகாண சபைகள் மற்றும் உள்ளூரதிகார சபைகள் என்பன பகிரங்க நிதி பற்றிய முகாமைத்துவத்தில் இச்சட்டத்தில் விதிக்கப்பட்ட வெளிப்படைத் தன்மை மற்றும் நிதிப்பொறுப்பு பற்றிய கோட்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்.*

*(2) மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சு செயலாளர் நிதி அமைச்சரினால் கோரப்படக்கூடியவாறான மாகாணசபைகள் மற்றும் உள்ளூரதிகாரசபைகள் என்பனவற்றின் அரசிறைகள் மற்றும் செலவினங்கள் மற்றும் ஏனைய நிதிசார் தகவல்கள் பற்றிய அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

## பாகம் XIV

### ஊழியர் கோப்பு முகாமைத்துவம்

*ஊழியர் கோப்பு முகாமைத்துவம்*

***63.*** (1) நிதி அமைச்சர் இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்தக்கூடிய விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் பகிரங்க உருவகங்களின் ஊழியர்கோப்பு முகாமைத்துவத்துக்கான தத்துவத்துடன் உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமையவும் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கமையவும் ஊழியர் கோப்பு முகாமைத்துவம் தொடர்பிலான நிதி அமைச்சரின் பொறுப்புகள் பகிரங்க உருவகங்களின் அலுவலர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்குமான சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் பற்றிய தீர்மானத்தினை உள்ளடக்குதல் வேண்டும்.

## பாகம் XV

### தவறுகளும் தண்டனைகளும்

*பகிரங்க உருவகமொன்றின் பகிரங்க அலுவலர்களினாலும் மற்றும் ஆளும் குழுவினாலும் நிதிசார் துர்நடத்தை*

***64.*** (1) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின்கீழ் ஒரு பகிரங்க உருவகத்தின் எந்த ஓர் அலுவலருக்கு அல்லது ஊழியருக்குத் தத்துவம் அல்லது கடமை ஒன்று அளிக்கப்படுகின்றதோ அல்லது குறித்தளிக்கப்படுகின்றதோ மற்றும் எந்தப் பகிரங்க உருவகத்தின் அலுவலர் அல்லது ஊழியர் ஒருவர் ஒரு செயலினால் அல்லது செய்யாமையினால் பகிரங்க நிதியின் அல்லது பகிரங்க ஆதனத்தின் சட்டமுறையற்ற, அதிகாரமளிக்கப்படாத, ஒழுங்கீனமான அல்லது விரயமான செலவினத்தை அல்லது துர்ப்பயன்பாட்டை வேண்டுமென்று அல்லது அசட்டையாகச் செய்கின்றாரோ அந்த அலுவலர் அல்லது ஊழியர் ஒருவர் நிதிசார் துர்நடத்தை என்ற செயலைப் புரிகின்றார் என்பதுடன் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) இயைபான பகிரங்க உருவகத்தின் தலைவர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நிதிசார் துர்நடத்தைக்கு ஆளாகவுள்ள அலுவலர் அல்லது ஊழியருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கையெடுத்தல் வேண்டும் அல்லது நிதிசார் துர்நடத்தையைப் புரிந்துள்ளவரெனச் சார்த்தப்பட்ட அலுவலரின் ஒழுக்காற்று அதிகாரியாக அவர் இராத பட்சத்தில், ஒழுக்காற்று நடவடிக்கைபற்றி ஒழுக்காற்று அதிகாரிக்கு அவர் உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

*(3)* (அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அல்லது விதியின் கீழ் தவறொன்று ஆக்கப்படுமிடத்து, அத்தகைய ஆட்கள் குழு—

(i) கூட்டிணைக்கப்பட்ட குழு, அக்கூட்டிணைக் கப்பட்ட குழுவின் விடயத்துக்கேற்ப, பிரதான நிறைவேற்று அலுவலர், முதன்மை நிறைவேற்று அலுவலர் அல்லது பிரதான நிருவாக அலுவலர் உள்ளடங்கலாக அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளர் மற்றும் அலுவலர்; அல்லது

(ii) பங்காண்மை, அத்தகைய பங்காண்மையின் பங்காளர் ஒவ்வொருவரும்,

தவறொன்றைப் புரிந்தவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) இயைபான அமைச்சரின் அமைச்சு செயலாளர் பந்தி (அ) வின் கீழான நிதிசார் துர்நடத்தைக்கு ஆளானவரான ஆட்கள் குழுவுக்கெதிராக ஒழுக்காற்று செயலை உடனடியாக எடுத்தல் வேண்டும்:

ஆயின், விடயத்துக்கேற்ப, எவரேனும் அலுவலர் அல்லது ஆட்கள்குழு அத்தகைய தவறை புரிவதனை தடுப்பதற்கு, அத்தகைய ஆள் ஒழுக்காற்று அதிகாரியின் திருப்திக்கு, அத்தகைய தவறு அவருடைய அறிவின்றி அல்லது அத்தகைய ஆள் அவசியமானவாறு எல்லா உரிய கவனத்துடனும் பிரயோகித்தார் என்பதனை எண்பிப்பின் அத்தகைய தவறு புரியப்பட்டதாகக் கருதப்படுதலாகாது.

**65.** இயைபான அமைச்சரினூடாக பிரதான கணக்கீட்டு அலுவலர் இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் விதிக்கப்பட்ட தேவைப் பாடுகளுடன் அத்தகைய அமைச்சரின் நோக்கெல்லையின்கீழ் வருகின்ற பகிரங்க உருவகமொன்றின் ஏதேனும் இணக்கமின் மையை அமைச்சரவைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

*அமைச்சரவைக்கு இணக்கமின்மை பற்றி அறிக்கையிடல்*

## பாகம் XVI

### நானாவித ஏற்பாடுகள்

ஏனைய சட்டங்களுடன் ஒத்திசைதல்

**66.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இலங்கையில் பகிரங்க நிதி முகாமைத்துவத்தை ஆளுகின்ற வேறு ஏதேனும் சட்ட ஏற்பாடுகளுக்கிடையி,ல் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்குதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்

**67.** (1) நிதியமைச்சர், இச்சட்டத்தினால் விதித்துரைக்கப் படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் அல்லது எவை தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு அதிகார மளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ள தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, நிதி அமைச்சர் பின்வரும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்–

(அ) அர்ப்பணிப்புகளை நிலைநாட்டுதல், கொடுப்பனவு கடப்பாடுகள் மற்றும் வினைத்திறன்மிக்க அர்ப்பணிப்பு கட்டுப்பாடு முறைமைக்கான ஏனைய தேவைப் பாடுகள்;

(ஆ) நிலுவைகளை வகுதிப்படுத்தல்; அத்துடன்

(இ) நிலுவைகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கொடுத்துத் தீர்த்தல், நிலுவைகள் பற்றிய தேவைப்பாடுகளை அறிக்கையிடல், பகிரங்க தனிசு முகாமைத்துவம் மற்றும் நிலுவைகளின் கட்டுப்பாடு தொடர்பிலான ஏனைய அத்தகைய கருமங்கள் என்ப வற்றுக்கு ஏற்புடைமையாகும் இயைபான எழுத்திலான சட்டங்களின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட வருடாந்த தனிசு அறிக்கையில் நிலுவைகளை உள்ளடக்குதல்.

(3) நிதியமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன் றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன்

அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) நிதியமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அதன் வெளியீட்டின் பின்னரான மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொரணப்படுதல் வேண்டும்.

(5) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் ஆனால் அதன்கீழ் ஆக்கப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். இல்லாதொழிக்கப்படுவதாக கருதப்படும் ஏதேனும் ஒழுங்குவிதி பற்றிய தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(6) பகிரங்க நிதிசார் முகாமைத்துவத்தைக் கருத்திற்கொண்டு அத்தகைய ஒழுங்குவிதிகள் பின்வருவன தொடர்பில் ஆக்கப் படும்வரை–

(அ) 1992 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தின் நிதிசார் ஒழுங்குவிதிகள்;

(ஆ) சனாதிபதியின் செயலாளர், திறைசேரிக்கான செயலாளர் மற்றும் பொதுத் திறைசேரியின்கீழான திணைக்களங்களின் தலைவர்கள் என்போரால் வெளி யிடப்படும் சுற்றறிக்கைகள்; அத்துடன்

(இ) அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அமைச்சுக்கான செயலாளரினால் வழங்கப்படும் சுற்றறிக்கை,

இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அத்தகைய ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் முரணாகாதவகையிலான அளவுவரை தொடர்ந்து அமுலில் இருத்தல் வேண்டும்.

அறிவுறுத்தல்கள் அல்லது பணிப்புரைகளை வழங்கு வதற்கான தத்துவம்

**68.** (1) திறைசேரிச் செயலாளர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்கு அவசியமெனக் கருதக்கூடியவாறான 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பகிரங்க உருவகங்கள் மற்றும் ஆட்களுக்கு பணிப்புரைகளை வழங்கலாம்.

(2) திறைசேரிச் செயலாளர் நிதி அமைச்சரின் அமைச்சினது அலுவலக வலைத்தளத்தின்மீது அத்தகைய பணிப்புரைகளை வெளியிடுதல் வேண்டும்.

## பாகம் XVII

### நீக்கங்கள்

நீக்கங்கள்

**69.** (1) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பிரிவுகள் 8 மற்றும் 14 என்பன இத்தால் நீக்கப்படுகின்றன.

(2) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் 8 ஆம் பிரிவின் நீக்கம் எவ்வாறு இருப்பினும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் நீக்கப்பட்ட 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஏதேனும் பகிரங்க கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டதும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு உடன் நேர்முற்போந்த நாளன்று உளதாயிருக்கும் ஏதேனும் வரவு செலவுத் திட்டம் இச்சட்டத்தின் 59 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

## பாகம் XVIII

### பொருள் கோடல்

பொருள் கோடல்

**70.** (1) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப் படுத்தினாலொழிய —

"கணக்கீட்டு அலுவலர்" என்பது, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"வருடாந்த செயல் திட்டம்" என்பது, நிதி ஆண்டு ஒன்றுக்காக பகிரங்க உருவகத்தின் இலக்குகள் மற்றும் முன்னுரிமைகளை அடைவதற்காக பயன்படுத்தப்படும் செயல்கள், நடவடிக்கைகள் மற்றும் மூலங்கள் என்பவற்றை உருவரைக்கும் ஆவணம் எனப் பொருள் படும்;

"வருடாந்த வரவு செலவுத் திட்டம்" என்பது, நிதியாண்டு ஒன்றிற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் என பொருள்படும்;

"ஒதுக்கீட்டுச் சட்டம்" என்பது, திரட்டிய நிதியத்திலிருந்து கொடுப்பனவு ஒன்றினை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்தினால் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்ட சட்டமொன்று எனப் பொருள் படும்;

"நிலுவைகள்" என்பது, மேலே விபரிக்கப்பட்ட பொறி முறைகளின் ஒன்றின்மூலம் முதிர்வானது தாபிக்கப் படாதிருப்பின், பின்னையது எழுத்திலான சட்டத்தின் மூலம் அல்லது ஒப்பந்தத்தின்மூலம் தாபிக்கப்படுகின்ற வையும் முதிர்வுத் தேதியில் செலுத்தப்படாதுள்ளவை யுமான நிதிசார் பொறுப்புடைமைகள் என்று பொரு ளாகும்; முதிர்வுக் காலப்பகுதியானது இயைபான விலைப்பட்டித் தேதியிலிருந்து அல்லது இயைபான ஒப்பந்தத்தின் நியதிகள் திருப்திப்படுத்தப்பட்டதிலிருந்து தொண்ணூறு நாட்களாக தாபிக்கப்படுதல் வேண்டும்.

"வரவுசெலவுத்திட்ட உருவகங்கள்" என்பது, அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள் மற்றும் விசேட செலவு பிரிவுகள் எ னப் பொருள்படும்;

"*மத்திய வங்கி*" என்பது, 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மத்திய வங்கி என பொருள்படும்;

"*பிரதான கணக்கீட்டு அலுவலர்*" என்பது, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள வாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"*அர்ப்பணிப்பு*" என்பது, கடப்பாடொன்றைச் செய்வதற்கு முன்னர் கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட தேவைக் கெடுத்தலான நிருவாகச் செயல் எனப் பொருள்படும்;

"*அரசியலமைப்பு*" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு என பொருள்படும்;

"*திணைக்களம்*" என்பது, குறித்த செயற்பாட்டு துறையொன்று குறித்தளிக்கப்பட்டு மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் செலவினத் தலைப்பொன்று தரப்பட்டுள்ள தான நியதிச் சட்டரீதியாக அல்லது நிருவாக ரீதியாக தாபிக்கப்பட்ட உருவகமொன்று என்று பொருள்படும்;

"*பணிப்புரைகள்*" என்பது, பொதுத் திறைசேரி அல்லது பொது திறைசேரியின் கீழான திணைக்களத்தினால் வழங்கப் பட்ட சுற்றறிக்கைள், வழிகாட்டு நெறிகள் அல்லது விசேட பணிப்புகளை உள்ளடக்குகின்றது;

"*மாவட்ட செயலகம்*" என்பது, மாவட்டத்தின் நிருவாக மற்றும் அபிவிருத்தி பணிகள் பொறுப்பிக்கப்பட்ட உருவகமொன்று எனப் பொருள்படும்;

"*கையுதிர்த்தல்*" என்பது, பெறப்படற்பாலனவான எவையே னும் குறிப்புகளை அல்லது கணக்குகளை அல்லது அவற்றோடிணைந்த எவையேனும் உரிமைகளையும் உரிமைக்கோரிக்கைகளையும் நாடி அல்லது நாடாமல், ஏதேனும் விற்பனை, குறித்தளிப்பு, கைமாற்றம் அல்லது வேறு கையுதிர்ப்பு உட்படவும், எவரேனுமாளினால் ஏதேனும் ஆதனத்தின் ஏதேனும் விற்பனையும் மீள்குத்தகைக் கொடுக்கல்வாங்கலும் உட்படவும், அவ்வாதனத்தின் விற்பனை, கைமாற்றம், உரிமம், குத்தகை அல்லது வேறு கையுதிர்ப்பு எனப் பொருள் படும்;

"நிதியாண்டு" என்பது, வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தின் மற்றும் பகிரங்க உருவகங்களின் நிதியாண்டு என்பது அரசாங்க அக்கறையுடன் 2007 ஆம ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கம்பெனிகள் தவிர்ந்த ஒவ்வோராண்டின் சனவரி முதலாம் நாளன்று தொடங்குகின்ற பன்னிரெண்டு மாதங்களாகவிருத்தல் வேண்டும் எனப் பொருள்படும்;

"நிதி இடர்" என்பது, ஆண்டிறுதி மற்றும் பல்லாண்டு நிதி நிகழ்ச்சித் திட்டத்தில் எதிர்வுகூறலிருந்து விலகுவதற்கு நிதி அரசிறை, செலவு, நிதியளிப்பு, சொத்து மற்றும் பொறுப்பு மாறுபாடுகளை ஏற்படுத்தக்கூடியது காரணிகள் அல்லது நிகழ்வுகள் எனப்பொருள்படும் ; அத்துடன் அது ஏனைய காரணங்களுக்கிடையில் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பேரின் பொருளாதார நிலைமைகள், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொழிற்பாடு, பகிரங்க தனியார் பங்காண்மை நடைமுறைப்படுத்துதல் மற்றும் இயற்கை அனர்த்தங்க ளிலிருந்து தொடங்கலாம்;

"அரசாங்கம்" என்பது, இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் என பொருள்படும்;

"உத்தரவாதம்" என்பது, குறித்தசில குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின்கீழ் வேறொரு சட்ட ஆள் அல்லது உருவகம் என்பவற்றின் ஒப்பந்தக் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு உத்தரவாதமளிக்கின்ற உத்தரவாத மளிப்பவராக அரசாங்கத்தினால் செய்யப்படும் வெளிப்படையான பொறுப்புமுயற்சி எனப் பொருள் படும்;

"செலவுத் தலைப்பு" என்பது, ஒதுக்கீட்டுச் சட்டம், ஆண்டிறுதி வரவு செலவுத் திட்டம் மற்றும் குறைநிரப்பி மதிப்பீடுகள் தொடர்பில் —

(அ) வரவு செலவுத் திட்ட உருவகமொன்றுக்காக மொத்த செலவினங்களை குறித்துரைக்கின்ற; அத் துடன்

(ஆ) பாராளுமன்றத்தினால் தனிவேறாக வாக்களிக்கப் பட்டவையான,

ஒதுக்கீடு எனப் பொருள்படும்;

''அறவீடு'' என்பது, அமைச்சரினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையின் திரட்டு நிதியத்துக்கான அத்தகைய வீதத்தில் அல்லது கொடுப்பனவு ஒன்றில் அரசாங்கத்தின் மூலதன மானியக் கொடைகள் பற்றிய திரும்பலொன்றின் திரட்டு நிதியத்துக்கு பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றினால் செய்யப்பட்ட கொடுப்பனவு ஒன்று எனப் பொருள்படும்;

“இடைக்காலம்” என்பது, மூன்றிலிருந்து ஐந்து ஆண்டு களுக்கிடையில் எனப் பொருள்படும்;

“இடைக்கால நிதிக் கட்டமைப்பு” என்பது, எதிர்வரும் நிதியாண்டு மற்றும் நான்கு அடுத்துறும் நிதி யாண்டுகளை (கணிப்பு ஆண்டுகள்) மேவுகின்ற பொருளாதார ஊகங்கள் மற்றும் நிதி கணிப்புகள் மற்றும் இலக்குகள் என்பவற்றின் தொகுதி எனப் பொருள்படும்;

“தேசிய அபிவிருத்திக் கொள்கைக் கட்டமைப்பு” என்பது, அபிவிருத்திக் கொள்கைகளுக்காக நீண்டகால இலக்குகள் மற்றும் வழிகாட்டுநெறியை கொண்டதான தர்க்க ரீதியான மற்றும் அதிகப்படியானதுமான கட்டடமைப்பொன்று எனப் பொருள்படும்;

“தேசியக் கொள்கை” என்பது, தேசிய அபிவிருத்தி குறிக் கோள்களை எய்துவதற்கான தேசிய அபிவிருத்திக் கொள்கை கட்டமைப்பிலிருந்து எழுகின்ற கொள்கைகள் எனப் பொருள்படும்;

“நிதிசாரா சொத்துக்கள்” என்பது, காணிகள், கட்டிடங்கள், கட்டமைப்புகள், பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திரங்கள், வாகனங்கள், அலுவலக உபகரணம், தளபாடங்கள் மற்றும் பகிரங்க உருவகத்தினால் முழுமையாக சொந்தமான, குறித்தளிக்கப்பட்ட, உடைமை

கொள்ளப்பட்ட, உரித்தளிக்கப்பட்ட, பயன்படுத்தப்பட்ட அல்லது குத்தகைக்கு விடப்பட்ட நிதி சாரா சொத்துக்கள் என வெளிப்படுத்தப்பட்ட ஏனைய சொத்துக்கள் உள்ளடங்கலாக உற்பத்தி செய்யப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்படாத அசையும் அல்லது அசையாத சொத்துக்கள் எனப் பொருள்படும்;

"நியதிச் சட்ட முறையற்ற நிதிகள்" என்பது, சட்டத்தினால் தாபிக்கப்படாத நிதிகள் எனப் பொருள்படும்;

"அலுவலகமுறையான வங்கிக் கணக்கு" என்பது, இலங்கை மத்திய வங்கியுடன் அல்லது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான வர்த்தக வங்கி அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடத்துவம் பெற்ற வங்கியுடன் பகிரங்க நிதியின் முகாமைத்துவத்தை வசதிப்படுத்துவதற்கென தொழிற்படுத்தப்படுவதற்கு மற்றும் பேணப்படுவதற்கும் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டதான திறைசேரிச் செயலாளரினால் அதிகாரமளிக்கப்பட்டு திறக்கப்பட்ட ஏதேனும் வங்கிக் கணக்கு எனப் பொருள்படும்;

"ஆரம்ப மீதி" என்பது, அரசாங்க நிதியின் வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாக அரசாங்கத்தின் ஒட்டு மொத்த மீதியைக் கொண்டிருத்தல் வேண்டும். பகிரங் சொத்துக்களின் தனியார் மயப்படுத்தல் அல்லது வர்த்தக மயமாக்களிலிருந்து ஆரம்ப மீதி, வரும்படிகளை கணக்கீடு செய்வதில் அரசாங்க அரசிறைகளின் பாகமாக விருத்தலாகாது என்பதுடன் மீள்மூலதனமயமாக்கல் நோக்கங்களுக்காக ஏனைய வங்கிகள் தவிர்ந்த கூட்டுத்தாபனங்களுக்கு அராசங்கத்தின் ஒப்புரவு செலுத்துகைகள் அரசாங்க செலவினமாக பதியப்படுதல் வேண்டும்;

"ஆரம்ப செலவினம்" என்பது, நிதியாண்டொன்றில் தனிசு சேவைகள் தவிர, அரசாங்கத்தின் மொத்த செலவினங் களாகவிருத்தல் வேண்டும்;

“விதித்துரைக்கப்பட்டது” என்பது, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவை எனப் பொருள்படும்;

“சனாதிபதி” என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி எனப் பொருள்படும்;

“மாகாண சபைகள்” என்பது, அரசியலமைப்பின் 154அ என்னும் உறுப்புரையின் பயனைக்கொண்டு மாகாணம் ஒன்றுக்காக தாபிக்கப்பட்ட மாகாண சபை எனப் பொருள் படும்;

“பகிரங்க கூட்டுத்தாபனம்” என்பது, அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையின்கீழான அத்தகைய சொல் லமைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“பகிரங்கத் தனிசு” என்பது, தனிசினால் மற்றும் 3 ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப் பட்ட உருவகங்களின் தனிசினால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் பொறுப்புடைமைகள் எனப் பொருள் படும்;

“பகிரங்க நிதி” என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கு கின்றது-

(அ) இயைபான ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டத் தினால் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பகிரங்க உருவகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள்;

(ஆ) ஊழியர்களினால் உதவுதொகைகள் எந்தச் சிக்கன, சேமிப்பு அல்லது கட்டிடச் சங்க அல்லது சேமநல நிதியங்களுக்கு செலுத்தப் படுகின்றவோ அந்தச் சிக்கன, சேமிப்பு அல்லது கட்டிடச் சங்க அல்லது சேமநல நிதியங்களை உள்ளடக்குகின்ற அங்கீகரிக்கப்பட்ட முடிவுறுத்

தல் நிதியங்கள் புறநீங்கலாக ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பகிரங்க உருவகத்தினால் வைத்திருக்கப்பட்ட நிதியங்கள், அல்லது ஊழியர்களின் சேவைகள் இயைபான எழுத்திலான சட்டத்தின் கீழ் முடிவுறுத்தப்படுவதன் மீது அவர்களுக்குப் பணிக்கொடைகளைக் கொடுப்பனவுசெய்யும் நோக்கத்துக்காகப் பேணப்பட்ட ஏதேனும் பணிக்கொடை நிதியம்;

(இ) ஏதேனும் எழுத்திலான சட்ட ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு அரசாங்கத்திற்கு உரித்தளிக்கப்பட்ட நிதியங்கள்; அத்துடன்

(ஈ) பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் 3ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பகிரங்க உருவகத்தினால் பெறப்பட்ட அல்லது கடன் வாங்கப்பட்ட நிதியங்கள்;

"பகிரங்க நிதியங்கள்" என்பது, ஊழியர்களினால் உதவு தொகைகள் எந்தச் சிக்கன, சேமிப்பு அல்லது கட்டிடச் சங்க அல்லது சேமநல நிதியங்களுக்கு செலுத்தப் படுகின்றவோ அந்தச் சிக்கன, சேமிப்பு அல்லது கட்டிடச் சங்க அல்லது சேமநல நிதியங்களை உள்ளடக்குகின்ற அங்கீகரிக்கப்பட்ட முடிவுறுத்தல் நிதியங்கள் புறநீங்கலாக திரட்டு நிதியத்தில் அல்லது வேறேதேனும் நிதியத்தில் உள்ள பணங்களும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பணங்களும் அல்லது ஊழியர்களின் சேவைகள் இயைபான எழுத்திலான சட்டத்தின்கீழ் முடிவுறுத் தப்படுவதன்மீது அவர்களுக்குப் பணிக்கொடைகளைக் கொடுப்பனவுசெய்யும் நோக்கத்துக்காகப் பேணப்பட்ட ஏதேனும் பணிக்கொடை நிதியமும் எனப் பொருள்படும்;

"பகிரங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்" என்பது, தேசிய அபிவிருத்தி கொள்கைக் கட்டமைப்பின் அடிப்படையின்மீது தயாரிக்கப்பட்ட எல்லா நடைபெற்றுக் கொண்டிருக்கும் மற்றும் பிரேரிக்கப்பட்ட பகிரங்க முதலீட்டுக் கருத்திட்டங்கள் மற்றும் பகிரங்க தனியார் பங்காண்மைக் கருத்திட்டங்கள் என்பவற்றைக் கொண்டுள்ள இடைக்கால சுழல் திட்டம் எனப் பொருள்படும்;

"பகிரங்க முதலீட்டுக் கருத்திட்டம்" என்பது, பிரசைகளின் வாழ்க்கைத்தரத்தினை அதிகரிப்பதற்கும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் சமூக தேவைகளை விளித்துரைப்பதற்குமான பகிரங்க சொத்துக்கள் அல்லது சேவைகளை அபிவிருத்தி செய்தல், விருத்தி செய்தல், தொழிற்படுத்தல் அல்லது பேணுதல் என்பவற்றை நோக்கி நிதிசார், பௌதிக அல்லது சேவைகளின் மூலங்களை ஒதுக்கும் நோக்குடன் அரசாங்கத்தினால், மாகாணசபையினால் அல்லது உள்ளூரதிகார சபையினால் நிதியளிக்கப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாடுகளின் தொகுதி எனப் பொருள்படும்;

" பகிரங்கப் பதவி வகிப்பவர்" என்பது, ஆலோசனை அல்லது நிருவாகப் பணி பொறுப்பிக்கப்பட்ட குழுவொன்றுக்கான அரசாங்க நியமனம் பெற்றவர் என்பதுடன் பகிரங்க நிதியினூடாக ஊதியமளிக்கப்பட்டவர் எனப் பொருள்படும்;

"பகிரங்க அலுவலர்" என்பவர் அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையில் தரப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பகிரங்க தனியார் பங்காண்மை" என்பது, தனிப்பட்ட திறத்தவர் முக்கியமான இடர் மற்றும் முகாமைத்துவ பொறுப்புடைமைய தாங்குகின்றதான பகிரங்கச் சொத்து அல்லது சேவை வழங்குவற்கான தனிப்பட்ட திறத்தவர் மற்றும் அரசாங்க உருவகமொன்று என்பவற்றுக் கிடையிலான நீண்டகால ஒப்பந்தமொன்று எனப் பொருள்படும்;

"இயைபான அமைச்சர்" என்பது அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் குறித்தொதுக் கப்பட்ட பகிரங்க உருவகத்தின் நோக்கெல்லையின்கீழ் வருகின்ற அமைச்சர் எனப் பொருள்படும்;

"அரசிறை கணக்கீட்டலுவலர்" என்பது வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளினால் குறித்தளிக்கப்பட்ட அரசிறைக் குறியீடுகளின் வருடாந்த அரசிறை மதிப்பீடுகளைத் தயாரிப்பதனை வசதிப்படுத்துகின்ற பொறுப்பு உரித்தாக்கப்படுகின்றவரும், மதிப்பீட்டுக்கும் உண்மையான சேகரிப்புக்கும் இடையேயான வேறு பாடுகளுக்கு இறுதியாக வகைகூறவேண்டியிருப்ப வருமான கணக்கீட்டலுவலர் ஒருவர் எனப் பொருள் படும்;

"விசேட செலவு அலகு" என்பது, வரவு செலவுத் திட்டத்தில் செலவினத் தலைப்பு தரப்பட்டுள்ளனதான அமைச்சு, திணைக்களம், மாவட்ட செயலகம் அல்லது மாகாண சபை என்பவை தவிர்ந்த உருவகம் ஒன்று எனப் பொருள்படும்;

"அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்" என்பது, இலங்கை மத்திய வங்கி தவிர —

(அ) அரசியலமைப்பின் கருத்தினுள்ளான பகிரங்க கூட்டுத்தாபனமொன்று;

(ஆ) பங்குடைமையின் பயனைக்கொண்டு அரசு நேரடியான அல்லது மறைமுகமான கட்டுப்பாட்டு அக்கறையைக் கொண்டுள்ள தான 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு தொழிற்படுகின்ற உருவங்கள்; அல்லது

(இ) 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழிற் பொறுப்புமுயற்சிகளை பகிரங்க கம்பனி

களாக மாற்றுதல் சட்டத்தின் நியதிகளின்படி அல்லது எந்த வேறு சட்டங்களின் நியதிகளின்படி ஏதேனும் தொழில் உருவகம் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப் பட்டுள்ளதோ அத்தகைய வேறு விடயங்களின் நியதிகளின்படி மாற்றப்பட்ட அரசுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனங்கள்,

எனப் பொருள்படும்;

"நியதிச் சட்ட நிதி" என்பது, அங்கீகரிக்கப்பட்ட முடிவுறுத்தல் நிதியங்கள் புறநீங்கலாக பகிரங்க நிதிகள் அவற்றுக்குக் குறித்தளிக்கப்படுகின்றதும் குறித்தவொரு நோக்கத்துக்காக ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அல்லது ஒரு பாராளுமன்றச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு தாபிக்கப்படுகின்றதும் திரட்டு நிதியம் தவிர்ந்ததுமான ஏதேனும் நிதியம் என்று பொருளாகும்; ஊழியர்களினால் எந்தச் சிக்கன, சேமிப்பு அல்லது கட்டிடச் சங்க அல்லது சேமநல நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்தப் படுகின்றனவோ அந்தச் சிக்கன, சேமிப்பு அல்லது கட்டிடச் சங்க நிதியத்தை அல்லது இயைபான எழுத்திலான சட்டத்தின்கீழ் ஊழியர்களின் சேவைகள் முடிவுறுத்தப்படுவதன் மீது அவர்களுக்குப் பணிக்கொடைகளைக் கொடுப்பனவு செய்யும் நோக்கத்துக்காகப் பேணப்பட்ட ஏதேனும் பணிக்கொடை நிதியத்தையும் இது உள்ளடக்கும்;

"வரி செலவினம்" என்பது, விலக்களிப்புகள், படிகள், கடன்கள், வீத நிவாரணங்கள் மற்றும் வரி தொடர்பிலான வரி ஒத்திவைப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது;

"நம்பிக்கைப் பொறுப்பு" என்பது, 1917 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"கணக்கு மீதான வாக்கு" என்பது ஒதுக்கீட்டுச் சட்டமொன்று இல்லாத நிலையில் ஆகக் கூடியது நான்கு மாதங்களுக்கு அரசாங்கத்தின் சேவைகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் ஆகியவற்றை தொடர்வதற்கென பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க செலவினம் பற்றிய மதிப்பீடு எனப் பொருள்படும்.

**71.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*